Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 280 பிலவ வருடம், ஆடி மாதம் 03ஆம் திகதி திங்கட்கிழமை (19.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 08, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## நக்கல் நமசிவாயம்




## மலையகத்தில் புதிய தொழிற்சங்க கூட்டணி

06

## போதைப்பொருள் வர்த்தகரிடமிருந்து கட்டுக்கட்டாக பணம் மீட்பு



02

# டெல்ட்டா திரிபு காற்றில் பரவலாம்!



## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை

*•யோ.தர்மராஜ்*

முழு உலகத்தையும் அச்சுறுத்திவரும் டெல்ட்டா திரிபு இனிவரும் காலங்களில் இலங்கையில் காற்றில் பரவும் ஆபத்து காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜனசுமன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முழு உலகத்திலும் இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட டெல்ட்டா திரிபே பிரதான கொவிட் திரிபாக மாறிவருகின்றது. இந்த அச்சுறுத்தலிருந்து இலங்கை மாத்திரம் தப்பித்துக்கொள்ளும் என நினைக்க முடியாது. ஆகவே, எதிர்வரும் காலங்களில் இலங்கையில் டெல்ட்டா திரிபு காற்றில் பரவும் என நினைக்கின்றோம்.

தடுப்பூசிகள் பெற்றுக்கொண்டிருந்தால் டெல்ட்டாவிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்றே விசேட நிபுணர்கள் கூறுகின்றனர். குறிப்பாக, சினோபார்ம், எஸ்ட்ராசெனிகா, ஸ்புட்னிக்வீ, மொடர்னா மற்றும் பைசர் உள்ளிட்ட அனைத்து தடுப்பூசிகளும்... 02

## சீதுவையில் அதிரடிப்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

*•நா. தினுஷா*

சீதுவை பேஸ்லைன் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

விசேட அதிரடிப்படையினர் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது சமிக்ஞையை மீறி காரொன்று பயணித்துள்ளது. இந்நிலையில், அந்தக் காரை அதிரடிப்படையினர் பின்தொடர்ந்து சென்றுள்ளனர். பேஸ்லைன் பகுதியில் காரை நிறுத்தியுள்ளதுடன், அதனைச் செலுத்திய நபர் முரணான வகையில் செயற்பட்டதன் காரணமாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

காயமடைந்த நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 02

## ஆளுங்கட்சி கூட்டத்தில் கம்மன்பிலவுக்கு ஆதரவு

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்த்து வாக்களிக்க ஆளுங்கட்சி நாடாளுமன்ற குழு நேற்று மாலை ஏகமனதாக தீர்மானித்தது. 02


## மாடறுப்பை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்

### உள்ளூராட்சி மன்றங்களுக்கு அமைச்சு அறிவிப்பு

மாடுகளை வெட்டுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சு, அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைய செயற்படுமாறு உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர்... 02

## வீடமைப்பு அதிகாரசபையின் தலைவராக துமிந்த சில்வா



### ஜனாதிபதியால் நியமனம்

ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலைசெய்யப்பட்ட மரணதண்டனை கைதி துமிந்த சில்வாவை தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவராக நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். 02


## 21 கட்சிகள் - 155 சிவில் அமைப்புகள் தேர்தல் மறுசீரமைப்புக்கு முன்மொழிவு

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் நியமிக்கப்பட்ட சபை முதல்வரும், வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான விசேட நாடாளுமன்ற குழுவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட 21 அரசியல் கட்சிகளிடமிருந்து முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதற்கு மேலதிகமாக பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புகளினால் 155 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அக்குழுவின் செயலாளரும், நாடாளுமன்ற ... 02

## கொழும்பில் மீட்கப்பட்ட 13 கோடி ரூபா ஹெரோயின்

### சமையலறையில் சூட்சுமமாக புதைத்துவைத்ததை அதிரடிப்படையினர் நள்ளிரவில் மீட்டனர்



02

## கொத்தலாவல சட்டத்தை நிறைவேற்ற முற்பட்டால் மக்களை ஒன்றிணைத்து பெரும் போராட்டம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



அரசாங்கம் தன்னிச்சையாக பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துமாக இருந்தால் அல்லது முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகச் சட்டத்தை நிறைவேற்ற முற்பட்டால், அறிவார்ந்த மகா சங்கம், பல்கலைக்கழக சமூகம்,... 02






# டெவன் நீர்வீழ்ச்சியை பார்க்கச்சென்ற யுவதி நீரில் அடித்துச்செல்லப்பட்டு மாயம்

## பத்தனையில் சம்பவம்



(எம்.கிருஸ்ணா)

பத்தனை டெவன் நீர்வீழ்ச்சியை பார்க்கச் சென்ற யுவதியொருவர் நீரில் அடித்துச் சென்றுள்ள சம்பவம் பதிவாகியுள்ளதுடன், யுவதியை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

லிந்துலை லென்ந்தோமஸ் தோட்டத்தைச் சேர்ந்த 19 வயதுடைய மணி பவித்ரா என்ற யுவதியே இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

மூன்று நண்பிகளுடன் நேற்று மதியம் ஒரு மணியளவில் டெவன் நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்ற குறித்த யுவதி, டெவன் ஆற்றில் இறங்கி கால்களை கழுவ முற்பட்ட போதே நீரில் அடித்துச் சென்றுள்ளார்.

டெவன் நீர்வீழ்ச்சி கற்பாறை பகுதியில் வழுக்கல் நிலை காணப்படுவதனால் அப்பகுதியில் நுழைய வேண்டாம் என தடை கம்பிவேலி போடப்பட்டுள்ளபோதிலும், அதைத் தாண்டியே யுவதிகள் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிப்பதுடன், 297 அடி உயரமுள்ள டெவன் நீர் வீழ்ச்சியில் வீழ்ந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிப்பதுடன், காணாமல்போன யுவதியை மீட்கும் பணியில் இராணுவத்தினரும் திம்புள்ள பத்தனை பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

# சிறுமி மரணம் தொடர்பில் ரிஷாட் எம்.பி. உண்மையை தெளிவுபடுத்த வேண்டும்

## வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

"மலையக சிறுமியின் மரணம் தொடர்பில் முழுமையானதொரு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். தமது வீட்டில் நடந்த சம்பவம் தொடர்பில் உண்மை நிலைவரத்தை மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டிய சமூகப் பொறுப்பு, கடமை ரிஷாட் பதியுதீனுக்கு இருக்கின்றது. ஏனெனில், அவர் ஒரு மக்கள் பிரதிநிதி. கட்சித் தலைவர். இதற்கெல்லாம் அப்பால் ஒரு தந்தை. எனவே, அவர் தாமாக முன்வந்து விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும். உண்மை வெளிவர, நீதியைப் பெற்றுக்கொடுக்க அவர் ஒத்துழைப்பு வழங்குவார் என நாம் நம்புகின்றோம்."

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"சிறார்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இந்நிலையில், அற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு சிறார்களை வெளியிடங்களுக்குத் தரகர்கள் வேலைக்கு அழைத்துச் செல்கின்றமையானது ஆட்கடத்தலுக்கு ஒப்பான செயல். எனவே, சிறார்களை வேலைக்கு அனுப்பும் பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அவர்களைப் பொறுப்பேற்பவர்கள் என அனைவரும் ஏதேவொரு விதத்தில் குற்றவாளிகளே.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலைசெய்த நிலையில் மலையக சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பல தரப்பினரும் இது தொடர்பில் குரல் கொடுத்து வருகின்றனர். இளைஞர்கள் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆகவே, இந்தச் சம்பவத்துக்கு நீதி நிவாரணத்தை வலியுறுத்தும் அதேவேளை, சமூக மாற்றத்துக்கான விழிப்புணர்வு வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் இவ்வாறானதொரு துயர் சம்பவம் நிகழாமல் இருப்பதைத் தடுக்க முடியும்.

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து சிறார்கள் வேலைக்கு செல்வதை தடுப்பது தொடர்பில் வலைத்தளங்களில் குரல் கொடுக்கும் இளைஞர்கள், களத்தில் இறங்கி சமூக பொறுப்புடன் விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம்" - என்றார்.





*கொழும்பு புறக்கோட்டை பகுதியில் பொலிஸார் நேற்று விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியோரை எச்சரித்ததுடன் முகக்கவசம் அணியாதோருக்கு அவற்றைப் பெற்றுக்கொடுத்தனர். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)*

# 12 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த அரசாங்கம் கவனம்

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொ'ரோனா தடுப்பூசி செலுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது - என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நாங்கள் ஆரம்பத்தில் 70 வயதுக்குட்பட்ட நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தினோம். அதன்பின்னர் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு செலுத்துவோம். அதன்பின்னர் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கும் மற்றும் 12 மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

நாங்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முறையை ஒரு சரியான முறையில் மேற்கொள்வதற்காக வயது அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றோம்.

வயோதிபர்களுக்கு, சுகாதார சேவையாளர்களுக்கு மற்றும் நோய்தொற்றுக்குள்ளானவர்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். இதனைத் தவிர ஏனையோருக்கு வயது அடிப்படையில் கொரோனா தடுப்பூசி வழங்கப்படும். அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளும் இவ்வாறே செயற்படுகின்றன. உலக சுகாதார ஸ்தாபனத்தால் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எவரும் பணத்திற்காக அல்லது தனிப்பட்ட இலாப நோக்கத்தை கருத்திற்கொண்டு கொரோனா தடுப்பூசி செல்லுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# மூவேளை உணவின்றி தவிக்கும் மக்கள்

## விரைவில் அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கையென்கிறார் அமைச்சர் பெசில்

யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போது மூன்றுவேளை உணவின்றி தவிக்கும் மக்கள் இருப்பதாக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், முதல் வேலையாக அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கையெடுப்பதாகவும் அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பெசில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதானிகளுக்கும் இடையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மக்களுக்குத் தேவையான மானியத்தை வழங்குவதே எங்களுடைய முதல் இலக்கு என்றும் இதுவரை முடக்கப்பட்டுள்ள நாட்டை முழுமையாக திறப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முறையான பொருளாதாரக் கொள்கைகளுடன் பொதுமக்களுக்கான மானியங்களை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிலிருந்து பணம் செல்வதை தடுப்பதற்கு உடனடியான நாட்டை திறந்தாக வேண்டும். நாட்டு முடக்கப்பட்டுள்ளதால் தேசிய ரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் பணம் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஆளுங்கட்சி கூட்டத்தில்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று மாலை ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற குழுவின் கூட்டம் நடந்தது.

இதில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் பலரும் தமது கருத்துகளை முன்வைத்தனர். அரசுக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் எதிர்க்கட்சியின் செயற்பாடுகளை கூட்டாக சேர்ந்து எதிர்ப்பதென இறுதியில் தீர்மானிக்கப்பட்டது.

### மாடறுப்பை...

எஸ்.டீ.ஏ.பி. பொரலெஸ்ஸ தெரிவித்தார்.

இதற்குத் தேவையான நான்கு சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### சீதுவையில்...

இவ்வாறு உயிரிழந்தவர் லலித் வசந்த பிந்து (வயது 44) என அடையாளங்காணப்பட்டுள்ளார்.

இவர் சீதுவ, வத்தளை, ராகம, மாத்தறை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் ஆறு படுகொலைகள் தொடர்பில் தேடப்பட்டுவந்த சந்தேகநபரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

### வீடமைப்பு...

இது தொடர்பான அறிவித்தலை ஜனாதிபதியின் செயலாளர், கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டிடப்பொருட்கள் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு விடுத்துள்ளார்.

துமிந்த சில்வா விடுதலை தொடர்பில் ஏற்கனவே சமூகத்தில் சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், இந்த நியமனம் குறித்தும் சமூக ஊடகங்களில் அரசுக்கெதிராக விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

### டெல்ட்டா திரிபு...

டெல்ட்டா திரிபிற்கு சிறந்த பிரதிபலனை வழங்குகின்றன. தடுப்பூசிகள் பெற்றுக்கொண்டவர்களுக்கு டெல்ட்டா திரிபு தொற்றினாலும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறைவாகவே இருக்கும். ஆகவே, தடுப்பூசி வழங்குவது மிக முக்கியமானதாகும்.

தென்னமெரிக்காவின் பேரும் என்ற நாட்டில் அடையாளம் காணப்பட்ட லெட்டா வகை பல நாடுகளில் பரவி வருகிறது. அதேபோன்று, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் அடையாளம் காணப்பட்ட எப்சிலன் என்ற மற்றொரு திரிபும் பல நாடுகளுக்கு பரவி வருகிறது. இவை அனைத்தையும் நாங்கள் கண்காணித்து வருகிறோம். இவற்றை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சின் பக்கத்தில் முன்னெடுத்துவருகின்றோம் - என்றார்.

### கொழும்பில்...

நா. தினுஷா

கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெருவில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் இரவு நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின்போது சமையலறையில் நிலத்துக்குக் கீழ் மறைத்துவைக்கப்பட்டிருந்த 13 கிலோகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. இதன்பெறுமதி 13 கோடி ரூபாவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வீட்டிலிருந்த கணவனும் மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்தியாவில் இருக்கும் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் கிம்புலாஎல குணா என்பவரின் சகோதரரான சுரேஷ் என்பவரே இந்தப் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### 21 கட்சிகள் -155...

பணியாட்தொகுதி பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹனதீர தெரிவித்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான விசேட நாடாளுமன்றக் குழுவுக்கு, முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த காலம் ஜூலை 15ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, மௌபிம ஜனதா கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (உடுநுவர கிளை), ஜனநாயக இடதுசாரி முன்னணி, லிபரல் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனநாயக ஐக்கிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் மகாசபை, ஐக்கிய சமாதான முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் சமூக ஜனநாயகக் கட்சி, ஜனநாயகக் கூட்டணி, சிங்களதீப ஜாதிக பெரமுன, இலங்கை சமசமாஜக் கட்சி, சமத்துவக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள், குறித்த விசேட நாடாளுமன்றக் குழுவின் எதிர்காலக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளன.

அதேநேரம், கடந்த 14ஆம் திகதி விசேட குழுவின் முன்னிலையில் ஆஜராகியிருந்த இந்நாட்டின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தமது யோசனைகளை அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

விசேட குழுவின் அடுத்த அமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

### போதைப்பொருள் ...

நா. தினுஷா

இலங்கையின் தென் கடற்பரப்பில் போதைப்பொருள், ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாக நம்பப்படும் சந்தேகநபர் ஒருவர் தங்கியிருந்த பன்னிபிட்டியவிலுள்ள வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கோடியே 39 இலட்சம் ரூபா பணத்தை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

டுபாயில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ரண்மல்லி என்பவரின் மனைவியின் சகோதரரின் வீட்டிலேயே இந்தப் பணம் மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கருத்துவெளியிடுகையில்,

தென் கடற்பரப்பில் கடந்த சில மாதங்களாக போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள் கடத்தப்படுவது குறித்து புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றன. அதனடிப்படையில் போதைப்பொருள் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் படகுகள் சிலவற்றை மீட்டதுடன், அவற்றின் உரிமையாளர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறு சந்தேகநபர்களிடமிருந்து 298 கிலோகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. அவர்களிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. டுபாயில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நதுன் சிந்தக மற்றும் அவரது உதவியாளரான ரண்மல்லி என்றழைக்கப்படும் சரித் சந்தகெலும் ஆகியோரே இலங்கைக்கு கடல்மார்க்கமாக போதைப்பொருள் கடத்திவருவதாக தெரியவந்தது.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது ரண்மல்லியின் மனைவியின் சகோதரர் தற்காலிகமாக தங்கியிருந்த பன்னிபிட்டிய, ஹிரிபிட்டியவிலுள்ள வீடொன்றில் சோதனை நடத்தியபோது 13.9 மில்லியன் ரூபா பணம் மீட்கப்பட்டது. இந்தப் பணம் போதைப்பொருள் வர்த்தகத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### கொத்தலாவல...

சிவில் சமூக அமைப்புகள், பிற அரசியல் கட்சிகள் மற்றும் இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தின் முயற்சியைத் தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக இருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு சஜித் பிரேமதாஸ விளக்கமளித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொத்தலாவல பாதுகாப்பு அறிவியல் பீடம் 1981ஆம் ஆண்டுமுதல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கெடட் அதிகாரிகளுக்கான பயிற்சி மையமாகவும், இலங்கையில் உயர் கல்வி கற்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை தற்போதுள்ள விதத்தில் பராமரிப்பதற்கும், இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு இன்னும் நவீன மற்றும் விஞ்ஞான பயிற்சிகளை வழங்குவதற்கும் தேவையான அந்த முடிவுக்கு எங்களது முழுமையான ஆதரவை வழங்குவதற்கும் நாங்கள் முழு மனதுடன் ஒப்புதல் அளிக்கிறோம்.

இருப்பினும், முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தை மீறி உயர்கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டு மற்றும் தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்கு வெளியே முன்மொழியப்பட்ட பல்கலைக்கழகத்தை நிறுவ முயற்சித்தல்,

பல்பக்க அறிவுச் செல்வத்தைக்கொண்ட குழுக்கள் மற்றும் துறைசார் குழுக்களைக் கொண்டவர்களால் முன்மொழியப்பட்ட பல்கலைக்கழகத்திற்குள் முடிவெடுக்கும் மற்றும் கல்வி கட்டமைப்பை நிறுவுவதில் உள்ள தோல்வி,

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், டீன் மற்றும் பிற அதிகாரிகளை நியமித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் பாடவிதானம், கற்கைகள் குறித்த முடிவெடுக்கும் அதிகாரத்தை பல்கலைக்கழகத்திலிருந்து அகற்றி அதை ஒரு மேலாதிக்க கட்டமைப்பிற்குள் உட்படுத்துதல்,

முன்மொழியப்பட்ட பல்கலைக்கழகத்தில் கற்கைகளின் தரத்தை மதிப்பிடுவதற்கும் பராமரிப்பதற்கும் முறையான தரப்படுத்தல் முறை மற்றும் கட்டமைப்பு முறை இல்லாதது,

முன்மொழியப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு பிற பிராந்திய பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு பட்டங்களை வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்குதல்,

போன்ற உண்மைகளின் அடிப்படையில் இந்த சட்டமூலத்திற்கு எங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம்.

முன்மொழியப்பட்ட சட்டம் இலவச கல்வி கட்டமைப்பிற்கும் இந்த நாட்டில் அதன் இருப்புக்கும் ஒரு மோசமான பாதிப்பைக் கொடுக்கும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். எனவே, உத்தேச கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தை உடனடியாக திரும்பப் பெறுமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறோம்.

ஜூலை 16ஆம் திகதி பௌத்த ஆலோசனைக் குழுவில் உரையாற்றிய ஜனாதிபதி, 1978ஆம் ஆண்டு 16ஆம் திகதி பல்கலைக்கழகச் சட்டத்தின் சில பகுதிகள் திருத்தப்பட்டு அல்லது முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டம் நிறைவேற்றப்படும் என்று கூறினார். இதுபோன்ற மக்கள் விரோத நோக்கங்களை அடைய பல்கலைக்கழக சட்டத்தைத் தொடக்கூடாது என்றும், பல தசாப்தங்களாக மக்கள் அனுபவித்துவரும் இலவசக் கல்வியின் சலுகையை குறைக்கக்கூடாது என்றும் ஜனாதிபதியை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். முறையான கலந்துரையாடலும் ஒருமித்த கருத்தும் இல்லாமல் பல்கலைக்கழகச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படுவது இந்த நாட்டில் கல்வி மற்றும் உயர்கல்வித்துறையில் கடுமையான நெருக்கடிக்கு வழிவகுக்கும் என்பதை ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாக நாங்கள் உங்களுக்கு நினைவூட்டுகிறோம்.

அரசாங்கம் தன்னிச்சையாக பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துமாக இருந்தால் அல்லது முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகச் சட்டத்தை நிறைவேற்ற முற்பட்டால், அறிவார்ந்த மகா சங்கம், பல்கலைக்கழக சமூகம், சிவில் சமூக அமைப்புகள், பிற அரசியல் கட்சிகள் மற்றும் இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தின் முயற்சியைத் தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக இருக்கிறது என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 368 பேர் பொலிஸாரால் கைது



தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 50 ஆயிரத்து 749 பேர் நேற்றுக் காலைவரை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களில் 49 ஆயிரம் பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுக்காலை ஆறுமணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 368 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் குளியாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என அவர் மேலும் குறிப்பிட்டார். அங்கு 117 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மாகாணங்களுக்கிடையிலான தடை நீடிக்கப்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக மேல்மாகாணத்துக்குள் நுழைய முற்பட்ட 338 பேர் கடும் எச்சரிக்கையுடன் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

# தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 70 இலட்சமாக உயர்வடைவு

நாட்டில் கொவிட் தொற்று தடுப்பூசி திட்டத்தின்கீழ் இதுவரையில் முதலாவது தடுப்பூசி அல்லது இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 70 இலட்சமாகும்.

தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின்கீழ் முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்டவர்கள் 54 இலட்சத்திற்கும் அதிகமாகும் என்று தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது. இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை சுமார் 16 இலட்சத்து 46 ஆயிரமாகும்.

கொவிசீல்ட் முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்கள் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 742 ஆகும். இதில் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 85 ஆயிரமாகும்.

சினோபார்ம் தடுப்பூசியில் முதல் டோஸை பெற்றவர்களின் எண்ணிக்கை 42 இலட்சத்து 76 ஆயிரத்திற்கு மேற்பட்டதாகும். இதில் இரண்டாவது டோஸை பெற்றவர்களின் எண்ணிக்கை 12 இலட்சத்து 45 ஆயிரத்து 800 ஆகும்.

ஸ்புட்நிக்-ஏ தடுப்பூசியின் முதலாவது டோசைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 57 ஆயிரத்து 368 ஆகும். இரண்டாவது டோசைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 500 ஆகும். பைஸர் தடுப்பூசியில் முதலாவது டோசைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்து 793 ஆகும்.

# கொழும்பு மாவட்டத்தில் 322 பேருக்கு கொரோனா

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்ட 1452 பேரில் 322 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 203 பேர், களுத்துறை மாவட்டத்தில் 175 பேர், கண்டி மாவட்டத்தில் 17 பேர், குருநாகல் மாவட்டத்தில் 16 பேர், காலி மாவட்டத்தில் 84 பேர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 101 பேர், கேகாலை மாவட்டத்தில் 50 பேர், புத்தளம் மாவட்டத்தில் 24 பேர் மற்றும் அனுராதபுரம் மாவட்டத்தில் 16 பேர் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் 54 பேர், பொலன்னறுவை மாவட்டத்தில் 42 பேர், அம்பாறை மாவட்டத்தில் 72 பேர் , நுவரெலியா மாவட்டத்தில் 21 பேர், இரத்தின புரி மாவட்டத்தில் 89 பேர், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 26 பேர் மற்றும் பதுளை மாவட்டத்தில் 32 பேர் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 35 பேர், மொனராகலை மாவட்டத்தில் 17 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 19 பேர் , முல்லைத் தீவு மாவட்டத்தில் 05 பேர், திருகோணமலை மாவட்டத்தில் 10 பேர், மாத்தளை மாவட்டத்தில் 07 பேர் , வவுனியா மாவட்டத்தில் 06 பேர் மற்றும் மன்னார் மாவட்டத்தில் 04 பேர் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 05 பேர் அடங்கலாக நேற்றுமுன்தினம் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

# மிருகக்காட்சிசாலையில் மேலும் நான்கு விலங்குகளுக்கு கொரோனா




தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் மேலும் நான்கு விலங்குகள் கொவிட் தொற்றுக்குள்ளாகி உள்ளதாக இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரு ஓரங்குட்டான் குரங்குகள் மற்றும் இரு சிம்பன்சி குரங்குகளுக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தொற்றுக்குள்ளாகி இதுவரை 3,733 பேர் உயிரிழப்பு



நாட்டில் மேலும் 31 கொரோனா மரணங்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்றுமுன்தினம் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் 17 பெண்களும் 14 ஆண்களும் அடங்குகின்றனர். அவர்களில் 23 பேர் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களாவர்.

அதற்கமைய, நாட்டில் இதுவரை 3,733 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, நேற்றுமுன்தினம்வரை 980 பேருக்கு கொரோனா தொற்று உறுதி'செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாட்டில் இதுவரை 2,83,040 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 19.07.2021 திங்கட்கிழமை**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**மேடம்** — தம்பதியருக்கு மற்றும் நட்புக்கு கொண்டாடும் நாளாக அமையலாம். வியாபாரத்தில் புதிய துவங்குதல் நிறைவேறும்.

**ரிஷபம்** — வணிகம் குறைவாக இருந்தாலும் இலாப கணக்கு மகிழ்வை தரும். காதலர்கள் மென்மையான போக்கில் இருப்பது நன்மை. உறவினர்களுடன் வாக்குவாதம் தவிர்க்க வேண்டும்.

**மிதுனம்** — கூட்டு வியாபாரம் மற்றும் சந்தைப்படுத்தும் தொழில் நன்மை பெறும். விரும்பிய வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புகள் நிறைவேறலாம்.

**கடகம்** — அதிகரித்த வேலைகளால் அல்லது வேலைகள் பற்றிய எண்ணங்களால் மனச்சுமை உண்டாகலாம். இல்லற மகிழ்ச்சி அமைதியை ஏற்படுத்தும்.

**சிம்மம்** — வாழ்க்கைத்துணையின் கருத்துகளை செயலில், தொழிலில் பயன்படுத்துவது நன்மை. சுற்றுலாத் துறையில் இருப்பவர்களுக்கு நல்ல நாளாக அமையும்.

**கன்னி** — நிதி சம்பந்தப்பட்ட தொழில் மற்றும் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கவனம் தேவைப்படும். இறைவணக்கம் தீமைகளை குறைக்கும்.

**துலாம்** — ஊடகத்துறையில் இருப்பவர்கள் நன்மை பெறுவார்கள். வாங்கிய கடனில் இன்று சிறு தொகையாவது செலுத்தினால் கடன்கள் நீங்கத் தொடங்கும். கலைத்துறையும் சிறப்பு பெறும்.

**விருச்சிகம்** — வணிகர்களுக்கு சிறிய பிரச்சினைகள் ஏற்படலாம். அனைத்து செயல்களிலும் நிதானமும், பொறுமையும் தேவைப்படும்.

**தனுசு** — பணியிடங்களில் மேன்மையும், வாழ்க்கைத்துணையின் அன்பான ஒத்துழைப்பும் கிடைக்கும். உயர் நிலையில் இருக்கும் ஒருவர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்.

**மகரம்** — பணிகளில் அதிகரிப்புகளும், இடையூறுகளும் உண்டானாலும் சாதனைகளும் இடம்பெறலாம்.

**கும்பம்** — காதலர்களுக்கு இனிமையான நாள். வியாபார பயணங்கள் நன்மை. வேண்டாதவர்கள் விடயங்களில் தலையீடு துன்பம் தரும்.

**மீனம்** — இறைவணக்கம் தேவை. வாகனம் மற்றும் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

# பிரித்தானியாவிலிருந்து நாடுதிரும்பிய டாக்டர் யாழ்ப்பாணத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்த முதியவர் பிரித்தானியாவிலிருந்து அண்மையில் ஊர் திரும்பியவர் எனத் தெரியவந்துள்ளது.

சிற்றம்பலம் இராசலிங்கம் (வயது-80) என்ற முதியவர் கொவிட்-19 காரணமாக உயிரிழந்திருந்ததாக நேற்றுமுன்தினம் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு உயிரிழந்த முதியவர், யாழ்ப்பாணம் அச்சுவேலி தோப்பு பகுதியைச் சேர்ந்த மருத்துவர் என்றும், கடந்த ஜூன் 29ஆம் திகதியே பிரித்தானியாவிலிருந்து ஊர் திரும்பியவர் என்றும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவரது உடலத்தை பொறுப்பேற்ற சுகாதாரத் தரப்பினர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தனர். அங்கு அவரது உடலிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

குறித்த பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அவரது மரணத்திற்கு கொவிட்-19 தாக்கமே காரணம் என கணடறியப்பட்டிருந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொவிட்-19 உறுதிசெய்யப்பட்ட காரணத்தினால் யாழிலுள்ளமின் மயானத்தில் அவரது உடல் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிற்றம்பலம் இராசலிங்கம் அச்சுவேலி வைத்தியசாலை அத்தியட்சகராக பணியாற்றி ஓய்வுபெற்றவர் என தெரிவித்த உறவினர்கள், ஊர் திரும்புவதற்கு முன்னதாக லண்டனில் பைஸர் தடுப்பூசியை செலுத்தியுள்ளமைக்கான அட்டையை வைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் 101 பேர் உட்பட வடக்கில் மேலும் 135 பேருக்கு கொரோனா




யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 101 பேர் உட்பட வடக்கில் மேலும் 135 கொரோனா வைரஸ் தொற்றிய நோயாளர்கள் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய கொவிட்-19 செயலணியின் நாளாந்த தொற்று நிலைவரா அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நேற்றுமுன்தினம் (ஜூலை-17) வட மாகாணத்தில் மேலும் 135 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 101 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களது எண்ணிக்கை 6,699 ஆக அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 19 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதன் மூலம் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கை 1,550 ஆக உயர்வடைந்துள்ளது.

வவுனியாவில் 06 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்மூலம் வவுனியா மாவட்டத்தில் இதுவரை நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களது எண்ணிக்கை 1,614 ஆக அதிகரித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 05 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களது எண்ணிக்கை 1,372 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 04 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்மூலம் மன்னார் மாவட்டத்தில் இதுவரை நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களது எண்ணிக்கை 1,337 ஆக அதிகரித்துள்ளது.



நிதிநிலை அறிக்கைக்கான தமிழக சட்டமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கக் கோரிக்கை விடுத்து தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் தெரிவித்துள்ள கருத்தானது, மாறுபட்ட சில கருத்துகளுக்கும் வித்திட்டுள்ளது.

இலங்கையில் போர்ச்சூழலின் நடுவே தங்களது உடைமைகளைக் கைவிட்டு, உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் ஒரே நோக்கத்துடன் இந்தியாவில் கரையேறிய காலகட்டம், தமிழர் வரலாற்றில் துயரம் படிந்த அத்தியாயம். தொண்ணூறுகளை ஒட்டிய ஆண்டுகளில் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்ற அகதிகள் ஒரே மொழி, ஒரே வாழ்க்கை முறை ஆகியவை அளிக்கும் பாதுகாப்புணர்வின் காரணமாக அங்கேயே தங்கிவிட்டார்கள்.

இப்போது இலங்கை என்பது அவர்களுக்கு பெரிதும் இளம்பிராயத்து நினைவுகள் மட்டுமே. இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்த இரண்டாவது தலைமுறையும் உருவாகிவிட்டது.

இந்நிலையில், அவர்கள் இலங்கைக்குத் திரும்பிவரும் பட்சத்தில், அங்கு ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்கான எந்த ஆதாரமும் அவர்களிடம் இல்லை. தமிழ்நாட்டில் மாநில அரசால் குறைந்தபட்ச அளவிலேனும் மாதாந்திர உதவித்தொகையும் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 100இற்கும்மேற்பட்ட அகதிகள் மறுவாழ்வு முகாம்களில் சுமார் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. மாவட்ட நிர்வாகத்தை அணுகி, தங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தொட ரப்பட்ட வழக்கின் தீர்ப்பிலும் அகதிகளின் குடியுரிமைக் கோரிக் கைகள் கருணையுடன் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இந்தியாவில் குடியுரிமை பெற்றால் மறுவாழ்வு முகாம்களிலிருந்து பிற ஊர்களுக்குச் சென்று வேலைவாய்ப்புகளை எளிதில் பெற முடியும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. 2019ஆம் ஆண்டின் குடியுரிமை திருத்தச் சட்டத்தில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து வந்த இந்துக்களைபோல் தங்களுக்கும் குடியுரிமை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பது அவர்களது வருத்தமாகவும் இருக்கிறது.

இலங்கையில் பூர்விகத் தமிழர்கள் சிறுபான்மையினராக இருந்ததாலேயே அவர்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை இழந்தனர். அதுவே போர்ச்சூழலை நோக்கியும் தள்ளியது. 1981இல் இலங்கையில் 12.7 வீதமாக இருந்த இலங்கைத் தமிழர்களின் மக்கள்தொகை 2021இல் 10.8% ஆகக் குறையும் என்றும் இது 2041இல் 9.8 வீதமாக மேலும் குறையும் என்றும் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் பாதுகாப்புணர்வுடன் வாழ வேண்டியது எவ்வளவு முக்கியமோ அதேபோல் இலங்கையில் வாழும் தமிழர்களின் நிரந்தரப் பாதுகாப்புக்கு மக்கள்தொகையில் அவர்களது விகிதாசாரம் குறைந்துவிடக்கூடாது என்பதும் முக்கியம். இலங்கைத் தமிழர்களின் இந்தியக் குடியுரிமைக் கோரிக்கையில் பேசப்படாத இந்தப் பிரச்சினையும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 19ஆம் திகதி, திங்கட்கிழமை

# இலங்கைத் தமிழ் அகதிகளின் இந்தியக் குடியுரிமைக் கோரிக்கை

தமிழகத்தில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்துவருகின்றனர். அவர்களில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் பேர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் அகதிகள் முகாம்களில் வசித்துவருகின்றனர்.1983இற்கு முன்னர் வந்த தமிழர்கள், பின்னர் வந்த தமிழர்கள் என அவர்களை இருவகைப் படுத்திட இயலும். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு எதிராக பல்வேறு வன்முறைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து ஏற் பட்ட பிரிவினைவாத இயக்கங்களின் நடவடிக்கைகளால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர்.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியா சென்ற தமிழர்களின் பெரும்பாலானவர்கள் தமிழக பூர்வீகக் குடிகள். அவர்களின் மூத்த குடும்ப உறுப்பினர்கள் இலங்கையில் தேயிலை தோட்டத் தொழிலில் ஈடுபடுவதற்காக வந்தவர்கள். 1964ஆம் ஆண்டு பிரதமர் பண்டார நாயக்க, இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி ஆகியோர் இணைந்து 9 இலட்சத்து 75 ஆயிரம் இந்தியத் தமிழர்களுக்கு இந்தியா அல்லது இலங்கையில் குடியுரிமை பெற ஒப்புதல் அளிக்கும் வகையில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். 1982ஆம் ஆண்டுக்கு முன்புவரை இந்தியாவிற்கு இந்த ஒப்பந்தத்தின் கீழ் வந்தவர்களுக்கு சட்ட ரீதியிலான அனுமதிகள் வழங்கப்பட்டன. ஆனால், இந்தத் திட்டம் முழுமையாக நடைபெறவில்லை.

கிட்டத்தட்ட 4.6 இலட்சம் பேர் தமிழகத்திற்கு திரும்பினார்கள். சிலர் ஐரோப்பாவில் தஞ்மடைந்தனர். சிலர் இந்தியர்களை திருமணம் செய்து இந்தியாவில் வாழ ஆரம்பித்தனர்.. 1963 முதல் 1989 ஆண்டுவரை பர்மாவிலிருந்து சுமார் 1.4 இலட்சம் தமிழர்கள் இந்தியா வந்தனர். வியட்நாமிலிருந்து 2055 பேர் இந்தியா திரும்பினார்கள். 1983ஆம் ஆண்டுக்குப் பின்பு இலங்கையிலிருந்து தமிழகம் வரும் நபர்களின் எண்ணிக்கை அதிகமாக தொடங்கியது.

19 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 60 ஆயிரம் பேர்107 முகாம்களில் தமிழகத்தில் வசித்து வருகின்றனர்.

ஓகஸ்ட் 2021ஆம் ஆண்டின் அதிகாரபூர்வ தகவல்களின்படி பார்த்தால் இவர்களின் 10 ஆயிரம் பேர் 11 வயதுக்கும் குறைவானவர்கள். படகுகள் மூலமாகவும், இதர வழிகளிலும் சட்டத்திற்கு புறம்பாக இந்தியாவுக்கு வந்தவர்கள் யாரும் அகதிகள் என்று அழைக்கப் பட்டமாட்டார்கள் என்று ஈழ அகதிகள் மறுவாழ்வு முகாம்களின் தலைவர் எஸ்.சி.சந்திரஹாசன் முன்னதாக கூறியுள்ளதை இங்கு நினைவு படுத்த வேண்டும். Organisation for Eelam Refugees Rehabilitation (OFERR) – இந்த அரச சார்பற்ற நிறுவனத்திற்கு மட்டும் தான் முகாம்களுக்கு செல்ல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

சட்டத்திற்குப் புறம்பாக இந்தியாவுக்குள் இலங்கைத் தமிழர்கள் 1980 ஆண்டுமுதல் 1990 ஆண்டுவரையில் தஞ்சம் புகுந்தனர். 2009ஆம் ஆண்டில் ஈழப்போர் உச்ச நிலையை அடையும் வரையில் ஒருசிலரே இந்தியாவுக்கு சென்றனர். இலங்கையில் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களில் இவர்களை "இந்தியாவைச் சேர்ந்த தமிழர்கள்" என்று குறிப்பிட்டுள்ளனர். இதனை அடிப்படையாகக்கொண்டு சுமார் 20 வீத மக்கள் இந்திய வம்சாவளியை கோருகின்றனர். 1983ஆம் ஆண்டு இந்தியா சென்றபோது இவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரே அறை கொண்ட வீடுகளில்தான் பலர் இன்னும் வாழ்கின்றனர்.

முகாம்களிலுள்ள 60,000 பேரைத் தவிர, வெளியில் சுமார் 30,000 இலங்கைத் தமிழர்கள் சொந்தமாக வாழ்கின்றனர். அருகிலுள்ள காவல் நிலையத்தில் அவர்கள் அடிக்கடி அறிக்கை அளிக்க வேண்டும். முகாம்களில் வசிப்பவர்களைவிட அவர்களுக்கு அதிக சுதந்திரம் உள்ளது. முகாம்களில் இருப்பவர்கள் தமிழகத்திற்கு வெளியே செல்ல முடியாது. வேறொரு மாவட்டத்திற்கு செல்லவேண்டும் என்றாலும் அவர்கள் அனுமதி பெறவேண்டும். முகாம்களுக்கு யாரும் செல்ல இயலாது. அதையும் தாண்டி சென்றால் காவல்துறை மற்றும் மத்திய புலனாய்வு அமைப்புகளின் க்யூ கிளையிலிருந்து விசாரணைகள் நடத்தப்படும். 1991 இல் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் அகதிகள் முகாம்களின் நிலை முற்றிலுமாக மாறியது.

இப்போது அவர்கள் இந்தியக் குடியுரிமையை எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் இலங்கைக்கு திரும்பி வந்ததால் ஏற்படவிருக்கும் பின் விளைவுகளை எண்ணி பயம்தான் கொள்கின்றனர். அவர்களால் ஐரோப்பா போன்ற இடங்களுக்குச் செல்ல இயலாது. அவர்களில் பெரும்பாலானோருக்கு தமிழகத்தில் உறவினர்கள் உள்ளனர். அவர்களுக்கு சொத்துகள் உள்ளன. இவர்களுக்கு குடியுரிமை வழங்க இந்தியா இதுவரை எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இந்த முகாம்கள் அனைத்தும் இடைக்காலத்திற்கு அடைக்கலம் தரும் வகையில் மட்டுமே உருவாக்கப்பட்டது. இலங்கையில் இயல்பான நிலை திரும்பும் வரையில் அவர்கள் வசிக்க ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக் கவே இது உருவாக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்கள் அகதி விடயம் என்பது தமிழகத்தில் அதிக உணர்ச்சி அலைகளைத் தூண்டும் ஒன்றாகவே இன்றும் இருக்கிறது. திமுகவோ, அதிமுகவோ மத்திய அமைச்சரவையில் முக்கிய பங்கு வகித்த போதும் குடியுரிமை வழங்கும் விடயத்தில் எந்த ஆக்கபூர்வமான முன்னேற்றமுமில்லை.முடிவுமில்லை.பாவம் அகதித் தமிழர்கள் .

# வாழ்வைக் கொடுப்பது வள்ளன்மை!

மனிதகுலத்தின் மிகப்பெரிய எதிரி வறுமையேயாகும். இதனை 'நல்குரவு' என்னும் சொல்லில் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். 'இன்மையின் இன்மையே இன்னாதது' என்பது அவர்தம் கருத்து. இல்லாமையே வறுமைக்குக் காரணம் என்றாலும் எல்லாம் இருந்தும் பயன்படுத்திக்கொள்ள இயலாத சூழலும் வறுமையின் வேறு வடிவமேயாகும். உழைக்கத் திறனிருந்தும், ஊக்கம் நிறைந்திருந்தும், கருவிகள் உடனிருந்தும் இயற்கைச் சீற்றங்கள், இன்றைக்குபோல் நோய்த்தொற்றுப் பெருமுடக்கக் காலச்சூழல் ஆகியன வறுமைக்கு மேலும் வலிமை சேர்த்து விடுகின்றன.

தனி மனிதனுக்குள் ஏற்படுகிற வறுமையுணர்வு அவன் சார்ந்த குடும்பத்தையும், சமூகத்தையும் மெல்லப் பற்றி, நாட்டின் வளர்ச்சியையும் ஒட்டுமொத்தமாக பாதிக்கத் தொடங்கி விடுகிறது. திருவள்ளுவர் அதனினும் ஒருபடி மேலே சென்று 'வறுமை என்னும் ஒரு பாவி ஒருவனைப் பிடித்து விட்டால், அவனுக்கு இந்தப் பிறவியில் மட்டுமன்றி அடுத்த பிறவியிலும் இன்பம் என்பது இல்லாமல் போய்விடும். அவன் தலைமுறைக்கும் பழிசேரும்' என்று எச்சரிக்கிறார்.

'நெருப்புக்குள் உறங்கும் வலிமையுடையவனும்கூட வறுமை நிலை வந்தால் ஒரு சிறிதும் உறங்கமாட்டான்' என்றும் வறுமையின் வெம்மையை உணர்த்துகிறார் வள்ளுவர். வறுமை என்பது பொதுவாயினும், அதிலும் அறஞ்சார்ந்த வறுமை, அறஞ்சாராத வறுமை என இரு பிரிவுகள் உள்ளன. அறஞ்சார்ந்த வறுமை உயர்வுடையது. அறஞ்சாராத வறுமையே மானுடத்தின் எல்லாத் தீயசக்திகளுக்கும் அடிப்படையாக அமைந்து விடுகிறது. தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே கூட பகையை உண்டாக்கி விடுகிறது இந்த அறஞ்சாராத வறுமை.

வறுமையே ஒரு மாயை என்று கூறுவார்கள். ஒருவன் தான் வறுமையில் இருக்கிறோம் என்பதை உணராமல் இருப்பது எத்தனை பெரிய மாயை? அதைவிடவும் பெரிய மாயை, உழைக்கத் திறனிருந்தும் உழைக்காமல் இருப்போர்க்குக் கொடுத்துக் கொடுத்து அவர்களது வறுமை நிலையை நிரந்தரமாக்கி அவர்களை எழவிடாமல் செய்வதல்லவா?

பொருளாலும், மனதாலும், ஊக்கத்தாலும் ஒருவன் தனக்குள் எய்துகிற தாழ்நிலையே வறுமையாகும். அத்தகைய வறுமை என்பது தாழ்நிலை என்றால், உடைமை என்பது உயர்நிலை. ஒன்றுமேயில்லாதவனும் தன்தேவைக்கும் அதிகமாகக் கொண்டிருப்பவனும் வாழ்கிற சமூகம் எப்படி ஒப்புரவுச் சமூகமாகும்? தாழ்நிலை மாறி உயர்நிலை அடையவும் உயர்நிலை மாறி சமநிலை அடையவும் திருக்குறள் உணர்த்துகிற அறமே 'ஈதல்' ஆகும்.

'கொள்வதும் மிகை கொளாது



கொடுப்பதும் குறைபடாது' ஆகிய அறம் வணிகத்திற்கு மட்டுமன்று ஈதலுக்கும் உரியதேயாகும். ஈதலின் வெளிப்பாடான கொடை என்பது, 'அருட்கொடை', 'அறக்கொடை', 'பொருட்கொடை' என மூன்று வகையில் விளங்கும். வள்ளல்களைபோல் எல்லாவுயிருக்கும் அருளை வாரி வழங்குதல் 'அருட்கொடை'. உலகம் உள்ள காலம்வரை இந்த அருட்கொடை நிலைத்து நின்று புகழ் சேர்க்கும்.

'தண்டு கொண்டு அடிக்கப்படும் முரசின் முழக்கம் காத தூரத்தினை எட்டும். வான்மேகத்தின் இடி முழக்கம் ஒருயோசனை தூரத்தினை எட்டும். ஆனால், அருட்கொடை செய்தோரைக் குறித்த புகழுரைகள் மூன்று உலகங்களையும் எட்டும்' என்று புகழின் தூரத்தினை அளவிடுகிறது அற இலக்கியம். தக்கார்க்கும், தகுதியுடைய செயல்களுக்கும் தன்னால் இயன்ற அளவு கருதித் தருவது அறக்கொடை. வறியார்க்கு ஒன்று ஈவதே மெய்யான ஈகை. மற்றதெல்லாம் குறியெதிர்ப்பை - தனக்கு வரப்போகும் புகழைக் கருதித் தருவதாகும். இதற்குப் 'பொருட்கொடை' என்று பெயர்.

இந்த மூன்றும் வறுமையைப் போக்கும் வாயில்கள்தாம் என்றாலும் ஒரு சமூகத்தின் நிலையை வறுமையை விடவும் துல்லியமாய் இந்தக் கொடைகள் வெளிப்படுத்திக் காட்டிவிடும். 'வண்மை இல்லை ஒரு வறுமை இன்மையால்' என்று நன்னாட்டின் வளத்தைக் கம்பர் சுட்டிக்காட்டுவார். வள்ளன்மையைப் பெருக்குவதைக் காட்டிலும் வறுமையை ஒழித்துவிடுவதே நாட்டுக்கு மேலும் சிறப்புத் தருவதாகும் என்று அவர் கருதியிருக்கிறார்.

இல்லாத ஒருவனுக்கு இருக்கிற மற்றொருவன் கொடுப்பதே ஈதல் ஆகும். அதனால் கொடுப்பவனுக்குப் புகழ் பெருகும். இந்தப் புகழைத் திருவள்ளுவர் 'உயிருக்கான ஊதியம்' என்கிறார். உடல் உழைப்புக்குக் கிடைக்கிற ஊதியம் நாம் சேர்க்கிற புறச்செல்வம் என்றால், பிறருக்குக் கொடுப்பதாகிய ஈதலினால் ஏற்படுகிற புகழ் அகச்செல்வமாக விளங்குகிறது.

பிறருக்குக் கொடுப்பதன் மூலமாக நாம் பெறுகிற புகழ் ஊதியம் என்றால் பிறர் கொடுப்பதைப் பெறுவதன் மூலம் நாம் அடைவது பழியும் கடனும்தானே. நமக்குத் தகுதியில்லாததை, தேவையில்லாததை, வேண்டாததைக் கூடவும் கிடைக்கிறது என்பதற்காக ஒன்றுக்கு இரண்டாக வரிசையில் நின்று வாங்குவது எத்தனை இழிவான பழிச்செயல் என்பதை நாம் உணர மறுக்கிறோம்.

ஈதலுக்கு முரணான செயல் இரத்தல் ஆகும். ஈதலைப் போற்றுகிற அறம் இரத்தலை இழிவென்பது வியப்பிற்குரியது. 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் இந்த உலகத்தை இயற்றிய கடவுள் கெடுக' என்று திருவள்ளுவர் சபிக்கிறாரே. இரத்தல் இல்லாமல் எவ்வாறு ஈதல் நிகழும்? இதுவே அறத்தின் நுட்பமாகும். 'ஈதல் இருக்கலாம், ஆனால், இரத்தல் இருத்தல் கூடாது' என்பதே சமூக அறத்தின் அடிப்படை நோக்கம்.

அதைவிட உயர்ந்த நோக்கம் மற்றொன்று உண்டு. தன்னிடம் இல்லையென்று ஒருவரிடம் சென்று இரந்து நிற்கும் நிலை இழிவானதுதான். ஆனால், அதனினும் இழிவானது, தாழ்வானது தன்னிடம் இருந்தும் இல்லாத ஒருவனுக்குத் தர மறுப்பதும், தன்னிடம் இல்லையென்று மறைப்பதும் ஆகும். அதைவிட மிகவும் இழிவானது இல்லாதவனுக்குத் தானும் கொடுக்காது, பிறர் கொடுப்பதையும் தடுப்பதாகும். அத்தகைய குணமுடையவன் 'உண்ண உணவும், உடுத்த உடையும் இன்றித் தான் மட்டுமல்லாது தன் சுற்றத்தாரோடு சேர்ந்து அழிந்து போவான்' என்கிறார் திருவள்ளுவர்.

இல்லாதவனுக்குக் கொடுப்பது உயர்ந்த



குணம என்றாலும் அதைவிட உயர்ந்தது பிறர் தன்நிலை கருதிக் கொடுக்கிறபோதும் வேண்டாம் என்று மறுத்து விடுவது. பிறருக்குக் கொடுக்க இயலாவிட்டாலும், பிறரிடம் சென்று இரவாமலிருப்பது பிறருக்குக் கொடுப்பதைக் காட்டிலும் இருமடங்கு புகழுடையதாம். அறத்தின் நுட்பம் எத்தனை வலிமையானது என்பது புரிகிறதா?

தன்னிடம் இருக்கிறது என்பதற்காக இல்லாத மற்றவர்க்காக மனமுவந்து கொடுக்கிறவர்கள் யாவர்? தன்னிடம் இல்லாதபோதும் - பிறர் கொடுக்கிறார் என்றாலும் தனக்கு அது வேண்டாம் என்று மறுக்கிறவர்கள் யார்? நாம் எத்தகைய சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதன் வெளிப்பாடு இது. சமூகத்தின் தோற்றத்திற்கு நாமே நல்ல சான்று.

'பசியோடிருப்பவனுக்கு மீன்களைக் கொடுக்காதே தூண்டிலைக் கொடு' என்கிறது மேலைநாட்டுப் பழமொழி. அதன் உட்பொருள், 'ஒருவனுடைய பசிக்கு மீனாகிய உணவைத் தந்து அவனைச் சோம்பேறியாக்கி விடாதே! தூண்டிலைத் தந்து மீன் பிடித்து உழைத்து உண்ணக் கற்றுக் கொடு!' என்பதயோகும். படைத்த கடவுளிடம்கூட, 'யாஅம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும் உருளிணர்க் கடம்பின் ஒளிதாராயே' என்று வேண்டக் கற்றுத் தருகிறது தமிழ் மரபு.

தோன்றின் புகழொடு தோன்றுதலே சிறப்பு. தன்னைக் கொத்தி அகழ்கிறவர்க்கும் குப்பைக் கூளங்களால் நிரப்புகிறவர்க்கும் விளைச்சலைத் தந்து மகிழ்கிறது நிலம். புல்லையும் வைக்கோலையும், கழுநீரையும் உண்டு விட்டுப் பாலைத் தந்து நிறைக்கிறது பசு. தன்னைச் சுற்றியுள்ள, தான் சார்ந்திருக்கிற ஐம்பூதங்களின் சக்திகளைத் தன்னுள் கொண்டு இலை, தழை, கழி, பூ, காய், கனி, நிழல், காற்று, பலகை, கரி என எத்தனையோ பொருள்களைத் தந்து கொண்டேயிருக்கிறது மரம்.

ஆனால், ஆறறிவு பெற்றுள்ள மனிதர்களாகிய நாம் என்ன செய்கிறோம்? மலட்டுத்தன்மை ஏற்படுவதனால் மட்டும் நிலம் தன் வளம் குன்றிவிடாது. புகழில்லாத மக்களைச் சுமக்கின்ற காரணத்தினாலும் இந்த நிலம் தன்னுடைய வளமையை இழந்து போய்விடும் என்பது வள்ளுவரின் புகழ்க் கணக்கு.

வாழ்வைக் கெடுப்பது வறுமை. வாழ்வைக் கொடுப்பது வள்ளன்மை. இந்த இரண்டையும் நீக்குகின்ற தன்மை எடுப்பது. அதாவது ஊக்கப்படுத்துவது. திருவள்ளுவர் மழையை எடுப்பதற்குச் சான்றாகச் சுட்டிக்காட்டுகிறார். 'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே (கொடுக்காது) எடுப்பதூஉம் எல்லாம் மழை' என்கிறார். தான் இல்லாமல் போனதால் ஏற்படுகிற வறுமை தீருவதற்காக உணவினை நேரிடையாகத் தராமல் உணவினை உருவாக்கிக்கொள்ளும் கருவியாகத் தன்னை உடன்படுத்திக்கொள்வதால் - எடுப்பதால் மழைக்குப் பெருஞ்சிறப்பு வந்து சேர்கிறது.

இல்லாத பிறருக்குக் கொடுத்து அவர்களைச் சோம்பேறிகளாக்குவதைக் காட்டிலும் அவர்களின் திறன்களைத் தூண்டி மேலும் வளரச்செய்து தங்களுக்கான தேவைகளைத் தாங்களே உருவாக்கிக்கொள்ளும் வல்லமை பொருந்தியவர்களாக அவர்களை மாற்றுவதுதான் அறிவுடையோர் பண்பு.

கொடுப்பதற்கு மாற்றான செயல் எடுப்பு போலும். இதனையே எழுச்சி என்கிறோம். அத்தகைய எழுச்சி சமூகத்தில் எழுந்துவிட்டால் பெரும் பிணியாகிய வறுமை முற்றிலும் ஒழிந்துபோகுமே. இசையொழிய வாழ்வார் வாழாதவர்கள் அல்லவா? இந்த இசையாகிய எழுச்சியின் தோற்றுவாய் நம் எல்லோர் முயற்சியிலும் அல்லவா இருக்கிறது. முயற்சி திருவினையாக்கட்டும் வறுமையை ஒழிக்கட்டும்.

**சொ .அருணன்**
**எழுத்தாளர்.**



# உறங்கும் நகரமொன்றின் உள்ளக ஆய்வு!

# தசாப்தம் கடந்தும் தீர்வில்லா கனவு நகரம்!!



வரலாற்றில் என்றும் உலக மக்களால் மறக்க முடியாத, உலகை உலுக்கிய சுனாமியால், ஆசியாவின் ஆச்சரியமாக நோக்கப்படும் இலங்கையில், அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டம், கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டமே. முப்பதாயிரத்திற்கும் அதிகமான உயிர்களை இலங்கையில் காவுகொண்ட சுனாமி, ஏறத்தாழ பத்தாயிரம் உயிர்களையும், பல கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகளையும் இழக்கச்செய்து, பல நூற்றுக்கணக்கானவர்களையும் காணாமலாக்கி, அம்பாறை மாவட்ட மக்களுக்கு அகதி வாழ்வின் அத்தனை அத்தியாயங்களையும் கற்பித்தது. இந்த அகதி வாழ்விலிருந்து விடுபட பலரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, அதில் முக்கிய தேவையாக இருந்த வசிப்பிடம் எனும் பிரச்சினையைத் தீர்க்க, நாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் உருவாயின. அதில் முக்கியமான ஒரு வீட்டுத்திட்டம்தான் இன்றைய கதையின் மூலக்கரு.

சுனாமியால் வாழ்விடங்களை இழந்தவர்களுக்காக நுரைச்சோலை பிரதேசத்தில் சவூதி அரேபியாவினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் 2010ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டன. இந்த வீட்டுத்திட்டத்தை இந்தக் கட்டுரை வாசிக்கும் நிமிடம்வரை உரிய பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியாமல் போனமைக்குப் பின்னால், வறட்டு கௌரவத்துடன் கூடிய ஓர் இனவாதச் சிந்தனை இருந்தது என்பதைப் புறந்தள்ளிவிட முடியாது. சம்பந்தமே இல்லாத காரணங்களை முன்வைத்து தொடுக்கப்பட்ட ஒரு வழக்கின் காரணமாக எப்போதோ பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவேண்டிய நுரைச்சோலை வீட்டுத்திட்டமானது, தற்போது சிதைந்து, பழுதடைந்து, காடுகள் வளர்ந்து மனித இனம் பயன்படுத்த முடியாத நிலையில், கொடிய விலங்குகளின் சரணாலயமாக காணப்படுகிறது என்பதுதான் கவலையான விடயம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நுரைச்சோலை பிரதேசத்தில் இந்த வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டது. சவூதி அரேபியாவின் நன்கொடை நிதியம், இதற்காக இலங்கை நாணயப் பெறுமதியில் சுமார் 552 மில்லியன் ரூபாவை அப்போது வழங்கியது. இந்த வீட்டுத்திட்டத்துக்கான ஒப்பந்தம் 2006ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிடம் வழங்கப்பட்டது. அப்போது வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக நுஆவின் தலைவி பேரியல் இஸ்மாயில் அஷ்ரப் பதவி வகித்திருந்தார்.

சுமார் 40 ஏக்கர் காணியில் அமைந்துள்ள இந்த வீட்டுத்திட்டத்தில் 500 வீடுகள் அளவில் உள்ளன. மேலும், ஆண் மற்றும் பெண்களுக்கான சகல வசதிகளுடனும் கூடிய தனித் தனிப் பாடசாலைகள், வைத்தியசாலை, சந்தைத் தொகுதி, பொது நிகழ்வுகளுக்கான மண்டபம், விளையாட்டு மைதானம், பள்ளிவாசல் மற்றும் பஸ் நிறுத்தங்கள் ஆகியவையும் அங்கு உள்ளன. அதுவொரு கனவுக்குட்டி நகரமாகும் என்கிறார்கள் கண்ணால் இந்த வீட்டுத்திட்டத்தை கண்டவர்கள்.

நுரைச்சோலை வீட்டுத்திட்டச் செயற்பாடுகள் எல்லாமே நன்றாகப் போய்க்கொண்டிருந்த ஒரு தருணத்தில், இடையில் புகுந்தது ஜாதிக ஹெல உறுமய கட்சி. நுரைச்சோலை வீடுகளை முஸ்லிம்களுக்கு மட்டும் வழங்குவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல்செய்தது. இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு, 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி அப்போதைய நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் வழங்கப்பட்டது. நுரைச்சோலை வீடுகளை தனி இனமொன்றுக்கு வழங்கக்கூடாது என்றும், அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கி மேற்படி வீடுகளை நீதியாகப் பகிர்ந்தளிக்குமாறும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது. மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டு 12 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனாலும், நுரைச்சோலை வீடுகள் இன்றுவரை யாருக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இப்போது, அங்குள்ள வீடுகளைப் பகிர்ந்தளித்தாலும், அவை பயன்படுத்தும் நிலையில் இல்லை என்பது பரிதாபத்துக்குரிய கூடுதல் தகவல்.

சுனாமியில் அம்பாறை மாவட்டத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டது பெரியநீலாவணை முதல் பொத்துவில் வரையிலான கரையோர மக்களே. இந்தக் கரையோரத்தில் அதிஉச்சமாக பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள். அப்படியிருக்க தமிழ், முஸ்லிம், சிங்கள, கிறிஸ்தவ மக்களுக்கென நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நாடுகளின் தொண்டு நிறுவனங்கள் வீடுகளை அமைத்துக் கொடுத்தன. அதேபோன்றே நுரைச்சோலை வீட்டுத்திட்டமானது சுனாமியால் வீடுகளை இழந்த முஸ்லிம்களுக்காக அரேபிய கடலின் சவூதி வள்ளல்களினால் நிர்மாணிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் வீடுகளை இழந்த பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்களுக்கு இதுவரையும் வீடுகள் கிடைக்காமல் உள்ளன. ஆனால், இந்த மாவட்டத்தில் சுனாமியால் நான்கைந்து பெரும்பான்மையினத்தவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டனர். அந்த பாதிப்பின் அளவும் பெரிதாக இல்லை. ஆனாலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான வீடுகள், சலுகைகள், நிவாரணங்கள் இந்த மாவட்ட பெரும்பான்மையின மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கப்படவேண்டியது.

இதேபோன்று, சுனாமியால் வீடுகளை இழந்த தமிழ் மக்களுக்கும் போதுமான தொகை வீடுகள் வழங்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறானதொரு நிலையில், நுரைச்சோலை வீடுகளைப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே நியாயமாகும் என்று ஒரு தரப்பார் வாதிட்டு வருகின்றனர். எப்படியாவது இப்போதைக்கு நுரைச்சோலை வீடுகளைப் பகிர்ந்தளித்தாலே போதும் என்கிற மனநிலையைக் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெருந்தொகை நிதியில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி வீட்டுத்திட்டமானது, யாருக்கும் பிரயோசனமின்றி அழிவடைந்து போவதை விடவும், மக்களுக்குப் பயனாகட்டும் என்று நினைக்கின்றமையே அதற்கான காரணமாகும் என்கிறார்கள்.

ஆனால், தற்போதைய நிலையில் அந்த வீடுகளைப் பெற்றுக்கொள்வோர் உடனடியாக அவற்றைப் பயன்படுத்தும் நிலையில் இல்லை. அங்குள்ள வீடுகளிலிருந்த பெறுமதியான பொருட்களெல்லாம் களவாடப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டம் முழுக்க காடு வளர்ந்துள்ளது. மேலும், பற்றைக் காடு நிரம்பியுள்ள அந்த வீடுகளில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளன. அதனால், அங்கு பாரியதொரு புனரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அதற்குப் பெருமளவான நிதி தேவைப்படும். இன்னும் சில காலங்களில் வில்பத்து போன்று இதுவும் காட்டுப்பகுதியாக மாறினாலோ, அறிவிக்கப்பட்டாலோ ஆச்சரியப்பட முடியாது.

இந்நிலையில், நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை புனரமைப்புச் செய்வதற்கான நிதியை வழங்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்த வரலாறுகளும் உள்ளன. ஏன், இப்போது கேட்டாலும் சவூதி அரசு நிதியளிக்கும் என்பது வேறுகதை. அவ்வாறு நிதி கிடைத்தாலும், குறித்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு கணிசமான காலமெடுக்கும். அதன் பின்னரே அங்கு மக்கள் குடியேற முடியும் என்பதெல்லாம் இருக்கிறது. இந்த நுரைச்சோலை வீட்டுத்திட்டம், அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. அதன் எல்லையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தீகவாபி கிராமம் உள்ளது. தீகவாபி, ஒரு பெரும்பான்மையினக் கிராமமாகும். ஆனால், அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளும் முஸ்லிம் பிரதேசங்களாகும். இதனால், தீகவாபியை முன்னிறுத்தி அங்கு எல்லைப் பிரச்சினைகள் தொடர்ச்சியாக எழுந்துகொண்டு வருகின்றன.

முஸ்லிம் கிராமங்களின் எல்லைகளுக்குள் அரச இயந்திரத்தின் துணைகொண்டு, தீகவாபி தனது எல்லைகளை நகர்த்துவது வாடிக்கையான விடயமாகும். மேலும், புனித பூமி எனும் பெயரில் முஸ்லிம் கிராமங்களின் எல்லைகள் அபகரிக்கப்பட்டு, தீகவாபியுடன் இணைக்கப்பட்டுமுள்ளன என்பதை கடந்தகால வரலாறுகள் தெளிவாகக் கூறிவைத்துள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே, நுரைச்சோலை வீட்டுத்திட்டம் தொடர்பில் தீகவாபி அச்சம் கொண்டது. தனது எல்லையில் முஸ்லிம்களை முழுமையாகக் கொண்டதொரு குடியிருப்பு உருவானால், அது தனக்கு ஆபத்தாக அமைந்துவிடும் என்று அந்தக் கிராமம் எண்ணியது. இந்தப் பின்னணியிலேயே நுரைச்சோலை வீட்டுத்திட்டம் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய வழக்குத் தாக்கல்செய்தது. நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தின் தற்போதைய நிலைக்கு அந்த வழக்கே காரணமானது. நுரைச்சோலை வீடுகளை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் கடந்த காலத்திலிருந்த எந்த ஆட்சியாளர்களும் விருப்பம் கொண்டிருக்கவில்லை. அதனால், நுரைச்சோலை விடயத்தில் அவர்கள் இழுத்தடிப்புகளைச் செய்துகொண்டு வந்தனர்.

பல தடவைகள் நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மீறிச் செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்ரி நினைத்திருந்தால், நுரைச்சோலை வீடுகளை உரிய பயனாளிகளுக்கு வழங்குமாறு அப்போதே உத்தரவிட்டிருக்கலாம். ஆனால், அதைச் செய்யாமல் போனமைக்கு முன்னாள் ஜனாதிபதிக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் காணப்பட்ட நெருங்கிய உறவும் ஒரு காரணமாக இருந்தது என்கிறார்கள் அரசியல் அவதானிகள். அந்தக் காலத்தில் பொத்துவில் தொகுதியிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா தோல்வியடைய, பொத்துவில் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காஸிம் இராஜாங்க அமைச்சராகவும், சம்மாந்துறையிலிருந்து எம்.பி. ஆசனத்தை மட்டுமன்றி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கதிரையையும் தக்கவைத்திருந்த எம்.ஐ.எம்.மன்சூர், அட்டாளைசேனையிலிருந்த மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், கல்முனை தொகுதி எம்.பி.யும், இராஜாங்க அமைச்சருமாகவிருந்த சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எம்.பி, எஸ்.எம்.எம்.இஸ்மாயில் என அந்த நல்லாட்சியின் முட்டுக்கள் அம்பாறையில் பலமானதாகவே இருந்தன. அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவாகி மாகாண சபையிலும் ஆரிப் சம்சுதீன், ஜெமீல், தவம், மாஹீர், ஜவாத், உதுமாலெப்பை, அமீர் என முஸ்லிம் தரப்பு பலமானதாகவும்தான் இருந்தன.

நல்லாட்சி அரசின் பலமிக்க சக்தியாக இருந்துகொண்டிருந்த அப்போதைய நகர திட்டமிடல் அமைச்சராக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் இந்த விடயத்தில் மிகப்பெரியளவுக்கு அசட்டையாக இருந்தார். அவருக்கு ஒத்தாற்போல் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ''நாங்கள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்'' என்பதை நிரூபிக்கும்வண்ணம் இவ்விடயத்தில் பாராமுகமாகவே இருந்தார் என்பதை மிகவும் கவலைக்குரிய விடயமாக இங்கு பதிவுசெய்துகொள்ள விரும்புகிறேன். இப்போதைய எதிரணித் தலைவரும், முன்னாள் வீடமைப்பு அமைச்சருமான சஜித் பிரேமதாச இந்தக் காயை சரியாகத் தட்டியிருக்க வேண்டும். அவரின் கையில் கம்பிருந்தும், தட்டும் தூரத்தில் மாங்காய் (வீட்டுத்திட்டம்) இருந்தும் , குறியை தவறவிட்டுள்ளார் அவர்.

கிழக்கின் அதிகாரத்தையும் , நல்லாட்சியின் துடுப்பையும் தன்வசம் வைத்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் அந்தக் காலத்தில் உருவான சகல வாய்ப்புகளையும் தவறவிட்டு இப்போதைய இலங்கை கிரிக்கட் அணியைப்போன்று இருந்தன. எவ்வாறாயினும், நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை பகிர்ந்தளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஒலிவாங்கியிடமும், காகிதங்களிடமும் உத்தரவிட்டார். ஆனால், அது வாய்மூலம் இருந்ததேயொழிய செயற்பாட்டுக்கு வரவில்லை. அந்த ஒரு விடயத்தைக்கூட சாத்தியமாக்க, ஊடகங்கள் மிக முக்கியமான பங்கை அப்போது ஆற்றியிருந்தன என்பதை மகிழ்ச்சியோடு இங்கு பதிவுசெய்துகொள்ள முடியும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டபோது சிறிய குடும்பங்களாக இருந்தவர்கள் இன்று மூன்று, நான்கு குடும்பங்களாக பெருகியுள்ளார்கள். இவர்களின் பிரச்சினைகள் பற்றி இந்த நாட்டிலுள்ள அதிகமான நீதிமன்றப் பதிவேடுகளும், பொலிஸின் குறிப்பேடுகளும் சாட்சி கூறும். இடப்பற்றாக்குறை, குடும்பத் தகராறுகள், முறைகேடான உறவுகள் எனப்பல சிக்கல்கள் உள்ளன. இவற்றின் அடிவேராக இருக்கும் விதை போதிய வசதிகளுடன் கூடிய வசிப்பிடமின்மை பிரச்சினையே. இந்தப் பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். இதனைத் தீர்க்க நல்லாட்சிக் காலத்தில் பல சட்டமூலங்கள், பல அரச நெருக்கடிகள் வந்தபோது, இந்தப் பிரச்சினை அடங்கலாக முஸ்லிம்களின் இன்னும் பல பிரச்சினைகளை முஸ்லிம் தலைவர்கள் முன்னின்று தீர்த்துவைப்பார்கள் என்று நம்பிய மக்களுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது. அப்போதைய ஜனாதிபதியின் கதையைக் கேட்டு நுரைச்சோலை வீடுகளைப் பெறுவதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்யும் விடயத்தில் அனைத்துத் தரப்புகளும் விழிப்பாக இருந்து , பயனாளிகளைத் தெரிவுசெய்து, போட்டோ கொப்பி கடைக்காரர்களை பணக்காரர்களாக்கியதுதான் மிச்சம். இந்தச் சந்தர்ப்பத்தில் அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான பயனாளிகளைத் தெரிவுசெய்தபோது, கடந்த காலங்களில் பல்வேறுவிதமான மோசடிகள் இடம்பெற்றிருந்தாக குற்றச்சாட்டுகள் எழுந்தமை இங்கு நினைவுகொள்ளத்தக்கது.

பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கான பொறுப்பைப் பெற்றிருந்த அதிகாரிகள் ஏனைய வீட்டுத்திட்டங்களில் தமக்கும், தமது உறவினர்களுக்கும் வீடுகளை ஒதுக்கிக்கொண்ட ஏராளமான கதைகள் மக்கள் மத்தியில் உள்ளன. இவ்வாறு அதிகாரிகளால் நியாயமற்ற முறையில் பெறப்பட்ட வீடுகள், அந்த வீடமைப்பு தொகுதிகளில் பாவனையின்றி பாழடைந்து கிடப்பதை இன்றும் பல இடங்களில் காணலாம். இல்லாதுபோனால் விற்பனை செய்த கதைகளும் உள்ளன.

எனவே, இதுபோன்ற திருகுதாளங்கள் நுரைச்சோலை வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதை வலியுத்துகின்றோம். நுரைச்சோலை வீடுகளைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகளின் பெயரும் அவர்கள் தெரிவுசெய்யப்பட்ட விதமும் வெளிப்படைத்தன்மையாக இருப்பதோடு, அவை பொதுமக்களின் பார்வைக்கு இடப்படுதலும் அவசியமாகும். மேலும், அவ்வாறான தெரிவு தொடர்பில் யாருக்கேனும் ஆட்சேபனைகள் இருப்பின், அந்த ஆட்சேபனைகளை எழுத்துமூலம் பெற்றுக்கொள்வதற்கான கால அவகாசமும் வழங்கப்படுதல் வேண்டும். எனவே, இந்த விடயத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரும், ஜனாதிபதி செயலக அதிகாரிகளும் அக்கறை செலுத்தவேண்டும் எனப்பல அறிக்கைகளும், கோரிக்கைகளும் வந்ததை கண்டு நிம்மதிப் பெருமூச்சை விட்டவர்களை அந்த காலப்பகுதி ஏமாற்றியதுதான் மிச்சம்.

இன்றைய காலகட்டத்தில் உருவாகியுள்ள பலமான செயற்பாட்டில் மாத்திரமின்றி, சிறந்த நிர்வாகத்திலும் தேர்ச்சிபெற்ற ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சியானது, இந்த நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை புனரமைப்பதற்கான நிதியை வெளிநாட்டு நிறுவனங்களினூடாகவோ அல்லது ஏதாவது வழிகளினுடாகவோ பெற்றெடுக்கும் நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், தற்போதுள்ள நிலையில் நுரைச்சோலை வீடுகளைப் பயனாளிகளுக்கு வழங்குவதில் எந்தவிதப் பயனும் இல்லை. வீடுகளைப் பெற்றுக்கொள்வோரால், அவற்றைப் பயன்படுத்தவும் முடியாது. எனவே, அந்த வீட்டுத்திட்டத்தை புனரமைத்து பயனாளிகளை துரிதமாகக் குடியேற்றவேண்டிய பொறுப்பை இந்த பலமிக்க அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். காரணம், இந்த வீடுகளை பகிர்ந்தளிப்பதில் காட்டப்பட்ட அக்கறையின்மையும் காலதாமதமுமே அவை சேதமடைவதற்கும் பாழடைவதற்கும் காரணமாகும். எனவே, அதற்குக் காரணமானவர்களே, அவற்றைத் திருத்திக் கொடுக்க வேண்டும். என்பதுதான் நீதியும், அறமும் கூட.

ஆனால், நுரைச்சோலை வீடுகளைப் புனரமைத்துக் கொடுத்தல் என்பது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் எனத் தெரியவில்லை. நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பகிர்ந்து கொடுப்பதிலேயே இவ்வளவு இழுபறிகள் இருக்கின்ற நிலையில், திரும்பவும் ஒரு தடவை வெளிநாடுகளிடமிருந்து நிதியைப் பெற்று, அதன்மூலம் அந்த வீடுகளைப் புனரமைத்துக் கொடுப்பதில் அரசாங்கம் ஆர்வம் காட்டுமா எனத் தெரியவில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கும் இந்தச் சூழ்நிலையில், வீடுகளைப் பங்கிட்டு கொடுக்காது விட்டால், அவற்றை இன்னும் பல சேதங்களுடன் இனிவரும் காலங்களில் பார்க்க நேரிடும்.

வீடமைப்பு அமைச்சை தன்வசம் வைத்திருக்கும் இந்த நாட்டின் ஆளுமைமிக்க தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் மிக நீண்டநாள் நண்பரும், அக்கரைப்பற்று மண்ணின் மன்னரும், முன்னாள் அமைச்சரும், இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தன்னுடைய பிரதேசத்தின் இந்தப் பிரச்சினையை தீர்க்க இன்று காலம் கனிந்திருக்கிறது. அரசின் பங்காளிக் கட்சியாக இருக்கும் தேசிய காங்கிரஸ் பல்வேறு சாதனைகளை மஹிந்த அரசில் சாதித்திருக்கிறது. அந்தப் பட்டியலின் நீட்சியாக இந்த பிரச்சினையையும் தீர்க்கவேண்டும் என்பதே அம்பாறை கரையோர மக்களின் தாகமாக இருக்கிறது. காடாகவுள்ள இந்த வீட்டுத்திட்டம் மக்கள் குடியேற்றத்துடன் ஒளிரவேண்டும். பாம்புகளும், தேள்களும் தம்முடைய இருப்பிடத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்கான முயற்சிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா மேற்கொள்ள வேண்டும்.

மஹிந்த அரசில் கட்டப்பட்ட இந்த வீட்டுத்திட்டத்தை ராஜபக்ஷக்களின் ஆட்சியில் மக்களுக்கு வழங்கவேண்டும். கடந்த காலங்களில் விட்ட தவறுகளுக்கு பாவமன்னிப்பு தேடும் விதமாக அரசின் அச்சாணியாக இருக்கும் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுடன் நல்ல உறவைக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அதாஉல்லா, ஹரீஸ், முஷாரப், பைசல், நசீர் அஹமட் போன்றோருடன் ஏனைய ஆளுந்தரப்பு எம்.பிக்களும், எதிர்தரப்பு எம்.பி.க்களும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். தேர்தல் மேடைகளில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் தலைமைகள் கொடுத்த வஹ்தா நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கான காலம் கனிந்துள்ளது.

உங்கள் கைகளில் கனமான கம்புகள் தரப்பட்டுள்ளன. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இலக்கு தெரிகிறது. சாதிக்கும் காலத்தை சரியாகப் பயன்படுத்தி சரித்திரமாக்க எல்லோரும் ஒன்றிணைய வேண்டும்.

**கட்டுரைத் தொகுப்பு: நூருல் ஹுதா உமர்**



# மலையகத்தில் புதிய தொழிற்சங்க கூட்டணி 12 சங்கங்கள் இணைக்கம் - விஜேசந்திரன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ஓரணியில் திரண்டு எதிர்ப்பதற்கும், தேசிய பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனம் எனும் கூட்டணியை உருவாக்குவதற்கும் மலையகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் பிரதான தொழிற்சங்கங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளன.

இணையவழி ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி உட்பட மலையகத்தில் செயற்படும் 12 தொழிற்சங்கங்கள் இதற்கான விருப்பத்தை வெளியிட்டதாக மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் விஜேசந்திரன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்கள்மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. அவர்களின் தொழில் உரிமைகள் மறுக்கப்படுவதுடன் சலுகைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன், வேலைச் சுமையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் தோட்டப்பகுதிகளில் மலையக தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளை தடுப்பதற்கு கம்பனிகள் முற்படுகின்றன. அவ்வாறு செய்து தொழிற்சங்கங்கள் இல்லாத காலப்பகுதியில் ஆங்கிலேயர்கள் நிர்வாகத்தை முன்னெடுத்ததுபோல் செயற்படுவதற்கு முற்படுகின்றன. இது பயங்கரமானதொரு நிலையாகும். தொழிற்சங்க கட்டமைப்பு சிதைக்கப்பட்டால் தொழிலாளர்கள் உதிரிகளாக்கப் படுவார்கள். ஒற்றுமை சிதைக்கப்படும். அடக்கு’முறை தலைதூக்கும்.

எனவே, இவ்வாறானதொரு நிலை ஏற்படுவதை தடுப்பதற்கு மலையகத்திலுள்ள பிரதான தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கிடையில் இணையவழி கலந்துரையாடலொன்று நடைபெற்றது. மலையக புத்திஜீவிகள் சிலரும் இதில் பங்கேற்றனர்.

இதனடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் மீதான அடக்குமுறையை ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும் எனவும், தேசிய பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனமொன்றை உருவாக்கி, வழிகாட்டல் குழுவை அமைத்து அதனூடாக இவ்விடயங்களை கையாள வேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. தொழிலாளர் நலன்சார் விடயத்தில் கட்சி, தொழிற்சங்க பேதங்களுக்கப்பால் ஒன்றிணைவதற்கு தொழிற்சங்கங்கள் ஆதரவை தெரிவித்துள்ளன. எனவே, சட்டம் மற்றும் அரசியல் ரீதியில் வெவ்வாறாக அன்றி ஒன்றாக அழுத்தம் கொடுக்கக்கூடிய சூழல் இதன்மூலம் உருவாகும்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் பட்சத்தில் கம்பனிகளின் சார்பில் முதலாளிமார் சம்மேளனம் கைச்சாத்திடுவதுபோல் தொழிலாளர்களின் சார்பில் தொழிற்சங்க சம்மேளனத்தை கைச்சாத்திட வைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்யக்கூடியதாக இருக்கும். அதேபோல் இதர தொழிற்சங்கங்களின் ஆதரவையும் திரட்ட முடியும்” - என்றார்.

# ரிஷாட் எம்.பி வீட்டில் உயிரிழந்த டயகம சிறுமிக்கு நீதி கோரி ஹட்டனில் ஆர்ப்பாட்டம்










(எம்.கிருஸ்ணா)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக வேலைசெய்த டயகம சிறுமியின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டுமெனக் கோரி ஹட்டன் நகரில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன், மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் விஜேச்சந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் வேலைசெய்த 15 வயதுடைய டயகம பகுதியைச் சேர்ந்த இஷாலினி என்ற சிறுமி தீக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளநிலையில், குறித்த சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை விசாணைகளின் மூலம் தெரியவந்துள்ள நிலையில், சிறுமியின் மரணத்தோடு சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்ய கோரி பல்வேறு தரப்பினரும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்

இந்நிலையில், மலையக மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவின் பிரிவினரால் ஹட்டன் மணிக்கூண்டு சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும் என்றும் இதுபோன்ற மலையகத்திலிருந்து கொழும்பு உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்த சட்டங்களை கடுமையாக்கவேண்டும் எனவும் ஆர்பாட்டத்தில் ஈடுட்டோர் கோஷம் எழுப்பினர்.

# சிறுமியின் மரணத்திற்கு நியாயம் வேண்டும்: அனைவரும் ஒத்துழையுங்கள்

## பெண்கள் அமைப்பு கோரிக்கை




(க.கிஷாந்தன்)

மலையக சிறுமியின் மரணம் தொடர்பான உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இவற்றை வலியுறுத்தி நாம் போராடுவோம். அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என வீட்டுப் பணிப்பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான ப்ரொடெக்ட் அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் வேலைசெய்த டயகம பகுதி சிறுமியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். பல தகவல்கள் வெளியாகினாலும், சட்டபூர்வமான அறிவிப்பு இன்னும் தெரியவரவில்லை. தரகர் ஒருவர் ஊடாகவே அச்சிறுமி சென்றுள்ளார். சிறாரை எவ்வாறு வேலைக்கு அமர்த்த முடியும்? இதற்கு முன்னரும் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எனவே, சிறுமியின் மரணம் தொடர்பில் எமக்கு உண்மை தெரியவர வேண்டும். எமக்கு நீதி அவசியம். எந்தவொரு தகவலும் மூடிமறைக்கப்படக்கூடாது. அதற்காக வீட்டுப்பணிப்பெண்களுக்காக குரல் கொடுக்கும் எமது சங்கம் போராடும். வீட்டுப்பணிப்பெண்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

மலையக பகுதியில் நாம் விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றோம். இதனால் பெண்கள் இன்று கேள்வி எழுப்பும் நிலை உருவாகியுள்ளது. சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை அனுமதிக்க முடியாது. அதற்கு சட்டத்தில் இடமும் இல்லை. பெண்களை வேலைக்க செல்லவேண்டாம் எனக்கூறவில்லை. ஆனால் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்” - என்றார் கருப்பையா மைதிலி.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# லுணுகல பிரதேசத்தில் 21பேருக்கு கொரோனா

(நடராஜா மலர்வேந்தன்)

லுணுகல பிரதேச சுகாதாரப் பிரிவில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மாதிரி பரிசோதனை பெறுபேறுகளின் அடிப்படையில் நேற்று 21 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

குறித்த நோயாளர்களை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை, பசறை கோணக்கலை மேற்பிரிவு தோட்டத்தில் 2 பேருக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பசறை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# அக்குறணை சுகாதாரப் பிரிவில் 19—26 வரை தடுப்பூசி

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் அக்குறணை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முதலாம்கட்ட கொவிட் தடுப்பூசி வழங்கும் திட்டம் எதிர்வரும் 19 - 26ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படவுள்ளது என பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

அதன்படி பின்வரும் ஒழுங்கில் மேற்கொள்ளப் படவுள்ளன.

நீரெல்ல முஸ்லிம் வித்தியாலயத்தில் 19ஆம் திகதியும், அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலையில் 24, 25ஆம் திகதிகளிலும், துனுவில ரத்பால வித்தியாலயத்தில் 19ஆம் திகதியும், கோணகல ஸ்ரீ சத்ததானந்த வித்தியாலயத்தில் 20 ஆம் திகதியும், அலவத்துகொடை தேசிய பாடசாலையில்20, 22, 23ஆம் திகதிகளிலும், அக்குறணை சாஹிரா வித்தியாலயத்தில் 22, 23ஆம் திகதிகளிலும், அக்குறணை முஸ்லிம் பாலிகா வித்தியாலயத்தில் 24, 25ஆம் திகதிகளிலும். பங்கொல்லாமட லுக்மானியா வித்தியாலயத்தில் 26ஆம் திகதியும், விலானகம நந்தன வித்தியாலயத்தில் 26ஆம் திகதியும் வழங்கப்படவுள்ளன. மேற்படி இடங்களில் மொடர்னா தடுப்பூசி வழங்கப் படவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மத்திய மாகாணத்தில் 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

## பாரத் அருள்சாமி தெரிவிப்பு





மத்திய மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டது - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும் பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

மத்திய மாகாண கொவிட்-19 தடுப்புக் குழுக் கூட்டம் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இது தொடர்பாக மேலும் ஊடங்கங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

மத்திய மாகாணத்தில் இதுவரை 813 கொவிட் மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இதில் கண்டி – 536, நுவரெலியா – 153 மற்றும் மாத்தளை – 124 என பதிவாகி உள்ளன. இந்நிலையில், கண்டி மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக 6 இலட்சத்து 25 ஆயிரத்து ஸ்புட்னிக் தடுப்பூசிகள் நேற்றுமுதல் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 406 தடுப்பூசிகள் வழங்கபட்டுள்ளன. இதில் 60 வயதுக்கு மேற்பட்டோரும் ஆசிரியர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. பொகவந்தலாவ, மஸ்கெலியா வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கு விசேட கவனம் வழங்கபடவுள்ளது. மேலும் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளில் மற்றும் அதனை அண்டியுள்ள கிராம, நகர பகுதிகளில் மக்கள் தொடர்ந்து தடுப்பூசிகளை பெற்றுக் கொள்கின்றனர். இதன்போது மக்களுக்கு விழிப்புணர்வையும் அவர்களுக்குத் தேவையான போக்குவரத்துக்கு மற்றும் ஆவணங்கள் தயார்ப்படுத்தல் சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் உதவிகளுக்கு சுகாதாரப் பிரிவினரால் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு நன்றி கூறினர். மேலும் 2 இலட்சம் தடுப்பூசிகள் நுவரெலியா மாவட்டத்திற்கு வழங்கப்படவுள்ளன - என்றார்.

எனவே, அருகில் தடுப்பூசிகள் வழங்கப் படும் இடங்களில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதுடன் சுகாதார விதிமுறைகளை பின் பற்றுமாறு கேட்டுக்கொள்வதாக பாரத் அருள்சாமி மேலும் தெரிவித்தார்.

# இரத்தினபுரி மாவட்ட தமிழ் பாடசாலைகள் அபிவிருத்திக்கு 30 மில்லியன் நிதி ஒதுக்கீடு

## இ.தொ.கா. ரூபன் பெருமாள் நன்றி தெரிவிப்பு

பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானிடம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் வேண்டுகோள் விடுத்ததற்கமைய, ஆரம்ப கட்டமாக இரத்தினபுரி மாவட்டத்தின் நான்கு பாடசாலைகளை அபிவிருத்திசெய்ய 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கலவான தமிழ் மகா வித்தியாலயத்திற்கு மாணவர்கள் கல்வி கற்பதற்கு வகுப்பறைகளுடன் கூடிய புதிய கட்டிடமொன்று அமைப்பதற்கும், தொலொஸ்வல பாரதி தமிழ் வித்தியாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்யவும், ஹிதெல்லன தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதியொன்றை அமைப்பதற்கும், மாதம்பை இலக்கம்: 02 தமிழ் மகா வித்தியாலயத்தின் மலசலகூட வசதிகளை செய்துகொடுப்பதற்கும் இந்நிதி ஒதுக்கீடு முன்மொழியப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இரத்தினபுரி மாவட்ட தமிழ் பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடலொன்று கல்வி அமைச்சில் இடம் பெற்றது.

மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அதிபர்கள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலானது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அண்ணாமலை பாஸ்கரன் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க, செந்தில் தொண்டமானால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது பாடசாலை அதிபர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமையவே நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்கு நன்றி தெரிவிப்பதற்கு கடமைப்பட்டுள்ளதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்தார்.

# LANKAQR & NFC ஊடான தொடுகையற்ற கட்டணங்களுக்கான POS சாதனங்களுடன் டேர்டன்ஸ் மருத்துவமனையை வலுவூட்டிய கொம்பாங்க்

இலங்கை கொமர்ஷல் வங்கியானது, வாடிக்கையாளர்களுக்கு வசதியான மற்றும் பாதுகாப்பான Tap & go ஸ்கேன் மற்றும் பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, அண்ட்ரோய்ட்டில் இயங்கும் விற்பனை முனை (POS) கருவிகளை கொழும்பிலுள்ள டேர்டன்ஸ் மருத்துவமனையில் பொருத்தியுள்ளது.

இந்த புதிய சாதனங்களுடன் டேர்டன்ஸ் மருத்துவமனையானது, LANKAQR இன் கீழ் QR அடிப்படையிலான் கொடுப்பனவுகள் மற்றும் அண்மைத் தகவல் தொடர்பு (NFC) தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒரே சாதனத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளவுள்ளதுடன், தொடர்பில்லாத கட்டணத் தெரிவுகளின் ஊடாக தொடுகையுறு புள்ளிகளைக் குறைத்து வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்றது.

COMMERCIAL BANK
DURDANS HOSPITAL
LANKAQR

டேர்டன்ஸ் மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள கொமர்ஷல் வங்கியின் அனைத்தும் அடங்கிய விற்பனை முனை கருவியானது விசா, மாஸ்டர்கார்ட், யூனியன் பே, லங்கா பே, ஜேசிபி அட்டைகள் வழியாகவும், அத்தோடு LANKAQR கீழ் உள்ள QR அடிப்படையிலான பணப்பை கொடுப்பனவு பரிவர்த்தனைகளை செயன்முறைப்படுத்தவும் அனுமதிக்கின்றது. இது வாடிக்கையாளர்களுக்கு தடையில்லா மற்றும் பணமில்லா கொடுப்பனவு அனுபவத்தை வழங்குவதன் மூலம் செக்கவுட் கவுண்ட்டர்களில் காத்திருக்கும் நேரத்தை வெகுவாகக் குறைக்கிறது. இந்த EMV/Chip, Magstripe, NFC மற்றும் QR அடிப்படையிலான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கும், வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் விரும்பும் தளத்தின் வழியாக விரைவாகவும் பாதுகாப்பாகவும் பணம் செலுத்துவதற்கான வசதியையும் வழங்குகிறது.

NFC-செயற்படுத்தப்பட்ட அட்டைகள் காந்தக் கீற்றுகளைக்கொண்டவர்களை விட மிகவும் பாதுகாப்பானவை, மேலும் அவற்றின் தொடர்பற்ற தொடர்பாடல் திறன் என்பது இந்த அட்டைகளை வைத்திருப்பவர்கள் ஒரே தொழில்நுட்பத்துடன் முனையம் அல்லது சாதனம் வழியாக பணம் செலுத்தும்போது மூன்றாம் தரப்பினருக்கு தங்கள் அட்டைகளை கொடுக்கவேண்டியதில்லை.

இலங்கையில் முழுவதும் காபன் நடுநிலையான (wholly carbon neutral) முதலாவது வங்கியான கொமர்ஷல் வங்கி, உலகின் முதல் 1,000 வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகவும் அப்பட்டியலில் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கையில் 268 கிளைகளையும் 931 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் (ஏ.ரி.எம்.) கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது. வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள், 19 கிளைகளைக் கொண்டுள்ள பங்களாதேஷை உள்ளடக்குகின்றன. அதேபோல், மியன்மாரின் நேய்பியுடோவில் நுண் நிதி நிறுவனமொன்றையும், மாலைதீவில் முழுமையான செயற்பாடுகளைக்கொண்ட முதல் வரிசை வங்கியொன்றை பெரும்பான்மைப் பங்குரிமையோடு வங்கி கொண்டுள்ளது.

## கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்த

# அரசாங்கத்தின் தடுப்பூசி திட்டத்திற்கு உதவும் Shield




Hemas Consumer Brands நிறுவனத்தின் முன்னணி கை சுத்திகரிப்பு தரக்குறியீடான Shield, கொவிட்-19 பரவலைத் தடுப்பது தொடர்பான நாட்டின் திட்டங்களுக்கு மீண்டும் ஆதரவளிக்க முன்வந்துள்ளது. ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான Hemas Consumer Brands நிறுவனத்தின் முயற்சிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு Shield ஆனது, மேல் மாகாணம் மற்றும் காலியிலுள்ள தடுப்பூசி மையங்களில் 28 கை சுத்திகரிப்பு தொகுதிகளை அமைத்து, அங்கு தடுப்பூசி பெற வரும் பெருமளவான மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

தடுப்பூசிக்குப் பின்னர் எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சுமார் 50,000 பேருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையையும் Shield குழு முன்னெடுத்தது. தடுப்பூசி போட வந்த ஒவ்வொருவருக்கும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்துடன் இணைந்து தொகுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அடங்கிய துண்டுப்பிரசுரமும் இதன்போது விநியோகிக்கப்பட்டது.

Shield இன் இந்த முயற்சி குறித்து, Hemas Consumer Brands சந்தைப்படுத்தல் முகாமையாளர் நவீத் அஞ்சூன் கருத்து வெளியிடுகையில், “அரசாங்கத்தின் தடுப்பூசி தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையிலும், கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான அதன் முயற்சிகளுக்கும் கை கொடுப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். தடுப்பூசிக்குப் பின்னர் எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது என்பதை நாம் அவதானித்தோம். Shield ஆனது, குடும்பங்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை மையமாகக்கொண்ட ஒரு தரக்குறியீடாக இருப்பதால், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் கொவிட்-19 பரவுவதைத் தடுக்க உதவுதல் உள்ளிட்ட சமூகப் பொறுப்பை அது நன்றாக அறிந்து வைத்துள்ளது. இது தொடர்பில் பொதுமக்களிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளதால், இந்த முயற்சியை ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்த நாம் திட்டமிட்டுள்ளோம்” - என்றார்.

உடல்நலம் மற்றும் சுகாதாரத்தில் உண்மையிலேயே அக்கறைகொண்ட ஒரு தரக்குறியீடான, Hemas Consumer Brands இன் ஆதரவுடன் Shieldஆனது இந்நாட்டிலுள்ள குடும்பங்களை தொடர்ந்தும் பாதுகாத்து வருகிறது. இதுபோன்ற முயற்சிகளில் குறிப்பாக, நாடு முழுவதுமுள்ள தடுப்பூசி மையங்களில் எல்லா நேரங்களிலும் உச்ச அளவிலான சுகாதாரத்தைப் பராமரிப்பது மிக முக்கியமானதாகும். உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) தெரிவித்துள்ளது போன்று இந்த தொற்றுநோயை நாம் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரே வழி பெருமளவிலான மக்களுக்கு தடுப்பூசி போடுவதேயாகும். Shield மற்றும் Hemas Consumer இதை அடையாளம் கண்டு, இது தொடர்பாக அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மிகத் தீவிரமான ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளது.

Shieldஆனது, உண்மையான இலங்கை தரக்குறியீடாகும். இது Hand Sanitizer, Soap and Hand wash (கை சுத்திகரிப்பான், சவர்க்காரம், கை கழுவும் திரவம்) போன்ற விரிவான சுகாதார மைய தயாரிப்புகளுடன் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பேண உதவுகின்றது. Shield Hand Sanitizer ஆனது, 50 மி.லீ, 200 மி.லீ. 225 மி.லீ. போத்தல்களில் கிடைப்பதுடன், அவை அன்றாட பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் கைக்கடக்கமானதாக காணப்படுகின்றன. Shield Hand Wash ஆனது, 200 மி.லீ, போத்தல்களிலும் 200 மி.லீ. மீள் நிரப்பும் பைக்கற்றுகளிலும், Shield Original மற்றும் Shield Nourish ஆகிய இரண்டு வகைகளில் கிடைக்கிறது.

Shield சவர்க்காரமானது, 99.9% கிருமிகளிலிருந்து பாதுகாப்பை வழங்கும், செயற்படுத்தப்பட்ட கரி எனும் தனித்துவமான மூலப்பொருளைக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. Shield சவர்க்காரம் தோல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, பாதுகாப்பானதும், சருமத்தில் எரிவை ஏற்படுத்தாது என நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த தரக்குறியீடானது, இலங்கை குடும்பங்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு குறித்து தொடர்ந்து கவனம் செலுத்துவதோடு, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையையும் உறுதி செய்கிறது.


## தன நிதானய

NLB
உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 32 72 74 78
திகதி: 17.07.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0538

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 1 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 76 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 168 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 4195 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2778 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 69999 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 13035 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,742.860.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 90,252

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 99,409,147.60

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk

## கொவிசெத

NLB
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2803 சீட்டிழுப்பு திகதி: 17.07.2021
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 08 40 58 68

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 10 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 156 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 341 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8336 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5388 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 137240 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 24934 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 176,406
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 6,945,600.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 79,049,052.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4508
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
திகதி: 17.07.2021
வெற்றி எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 6 9 8 4 0 4

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ 6 9 8 4 0 4 | ரூபா. 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ ■ 9 8 4 0 4 | ரூபா. 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 8 4 0 4 | ரூபா. 10,000/- | 94 |
| 4ஆம் பரிசு | ■ ■ ■ ■ 4 0 4 | ரூபா. 1,000/- | 942 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 0 4 | ரூபா. 100/- | 9424 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 4 | ரூபா. 20/- | 93550 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 6 9 8 4 0 ■ | ரூபா. 10,000/- | 9 |
| 8ஆம் பரிசு | ■ 6 9 8 4 ■ ■ | ரூபா. 1,000/- | 95 |
| 9ஆம் பரிசு | ■ 6 9 8 ■ ■ ■ | ரூபா. 100/- | 935 |
| 10ஆம் பரிசு | ■ 6 9 ■ ■ ■ ■ | ரூபா. 50/- | 9372 |
| 11ஆம் பரிசு | R ■ ■ ■ ■ ■ ■ | ரூபா. 20/- | 37421 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,090,920.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,598,217.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

## Mega POWER

මෙගා පවර්
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 0856
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
திகதி: 17.07.2021
ஆங்கில எழுத்து: G
சுப்பர் இலக்கம்: 15
வெற்றி இலக்கங்கள்: 20 29 67 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 68 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 165 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4336 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2897 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 71517 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13073 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 137,170,026.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,891,780.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk
ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

# திரிபடைந்த வைரஸ் வெளிநாட்டிலிருந்து வரவேண்டும் என்றல்ல அதிகமாக கொரோனா தொற்று பரவலடையும் இடங்களில் தோன்றலாம்

## மட்டு. போதனா வைத்தியசாலை நுண்ணுயிர் நிபுணர் வைத்தியர் வைதேகி ரதீபன் பிரான்சிஸ்

(கனகராசா சரவணன்)

திரிபடைந்த கொரோனா டெல்ட்டா, அல்பா மற்றும் பீற்றா வைரஸ்கள் இன்னொரு நாட்டில் இருந்துதான் இலங்கைக்கு வரவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால், எங்களுக்குள் இருக்கின்ற வைரஸ் அதிகமாகப் பரவலடையும்போது அது திரிபடைந்து டெல்டா, அல்பா, பீற்றா போன்ற வைரஸ்களாக மாறலாம். எனவே, இதனைக் கட்டுப்படுத்த ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமென மட்டு. போதனா வைத்தியசாலை நுண்ணுயிர் நிபுணரும், கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய விஞ்ஞான பராமரிப்பு பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்தியர் வைதேகி ரதீபன் பிரான்சிஸ் தெரிவித்தார்.

திரிபடைந்துவரும் கொரோனா தொடர்பாக மட்டு. போதனா வைத்தியசாலை நுண்ணுயிர் நிபுணர் வைத்தியர் வைதேகி ரதீபன் பிரான்சிஸ் நேற்று (18) தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்றது. அது அதிகரிக்கின்றதா, குறைகின்றதா என்பதைவிட அது இருக்கின்றது என்பதுதான் உண்மை. அதன் தாக்கம் மட்டக்களப்பிலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

திரிபடைந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எங்களால் செய்யவேண்டியது பரவலை எவ்வளவுக்கு தடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு தவிர்த்துக் கொள்ளவேண்டும். இந்த பரவலை தடுப்பதற்காக நாட்டைப் பூட்டிவைக்க வேண்டும். ஆனால், நாட்டைப் பூட்டிவைப்பது எவ்வளவு காலத்துக்கு என்பது நடைமுறை சாத்தியமில்லாத ஒரு விடயம்.

ஆகவே, நாட்டைத் திறக்கத்தான் வேண்டும். அப்படித் திறக்கும்போது இன்னும் கவனமாக இப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்வதுடன், பரவலை கட்டுப்படுத்துவதில் ஒரு பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும்.

இதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டியது அதிகமாக கூட்டங்கள் கூடும் இடங்களை தவிர்த்துக் கொள்வதுடன், கூட்டம் கூடுவதற்கான சந்தர்ப்பத்தை எப்போதும் உருவாக்கக் கூடாது. அது திருமணவீடாகவோ, மரணவீடாகவோ இருக்கலாம். வேறு தேவையற்ற கொண்டாட்டங்களாகவும் இருக்கலாம். இவை இந்த காலகட்டத்தில் தேவையற்றாக கருதி அவற்றைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. தொடர்ந்து நோய் அறிகுறிகளுடன் நாளாந்தம் 15க்கும் மேற்பட்ட நோயாளிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, எங்களால் முடிந்தளவிற்கு பொறுப்புணர்ச்சியுடன் இந்த பரவலைக் கட்டுப்படுத்தி எங்களை நாங்களே காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்றார்.

# கடைசிவரை காத்திராமல் பெருநாள் கொள்வனவுகளை நேரகாலத்தோடு முடித்துக்கொள்ளுமாறு வேண்டுகோள்

## சம்மாந்துறை கொரோனா செயலணி விடுத்தது

(நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம். நாஸீம்)

சம்மாந்துறை பிரதேச கொரோனா பாதுகாப்பு செயலணிக் கூட்டம் ஹஜ்ஜுப் பெருநாள் கொத்தணி ஒன்று உருவாகாமல் தடுக்கும் நோக்குடன் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா தலைமையில் நேற்று முன்தினம் (17) பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.





கொரோனா தொற்று நோயிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கிலும், தற்போது நாட்டில் வேகமாகப் பரவிவரும் கொரோனா தொற்றைத் தடுக்கும் முகமாகவும், சம்மாந்துறை பிரதேச செயலகம், பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனம், பொலிஸ் நிலையம், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் இலங்கை இராணுவத்தினர் ஆகியோர் ஒன்றுகூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அவற்றைக் கட்டாயம் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தீர்மானங்களாக அனைத்து விடயங்களிலும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார வழிமுறைகளைப் பேணி நடப்பதுடன், பெருநாள் கொள்வனவுகளை கடைசிவரை காத்திராமல் கால நேரத்தோடு முடித்துக் கொள்ளுமாறும், பெருநாள் தொழுகையை முஸ்லிம் சமய திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைவாக பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபையின் திட்டமிடலை பின்பற்றி 100 பேருக்கு மேற்படாத வகையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தவேண்டும் என்பதுடன், குடும்ப ஒன்றுகூடல்களை மிக நெருக்கமானவர்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்வதுடன், பொதுமக்கள் அனைவரும் மற்றவர்களுக்கு கொரோனா வைரஸைப் பரப்பிவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்துமாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், திருமண வீடுகள் மற்றும் மரண வீடுகளுக்கு சமுகமளிக்கின்ற அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றச் செய்வது முக்கிய கடமை என்பதை உணர்ந்து செயற்படுமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோருக்கு எதிராக நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் சபையினால் அதிரடி தீர்மானம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

போதைப்பொருள் விற்பனை செய்வோருக்கெதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கடந்த 10 ஆம் திகதி நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் தர்மகர்த்தா சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, பகிரங்க அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் போதைவஸ்து பாவனையோடு தொடர்புடைய குடும்பத்தினரின் தொடர்புகளைத் துண்டித்தல், ஜனாஸா அடக்கத்தில் தலையிடாதிருத்தல், ஜனாஸாக்களை முஸ்லிம் மையவாடிகளில் அடக்காதிருத்தல் போன்ற விடயங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், வெளியூர்களிலிருந்து வருகை தந்து வசிப்போர், திருமணம் செய்துள்ளோர் இச்செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டால் ஊரைவிட்டு வெளியேற்றப்படுவாரெனவும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக போதைவஸ்து பாவனையோடு தொடர்புடையோரின் பெயர் விபரம் பகிரங்கமாக காட்சிப்படுத்தப்படுவதோடு, சம்பந்தப்பட்டோர் சட்ட நடவடிக்கைக்காக உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் செயலாளரும் சிரேஷ்ட மௌலவி ஆசிரியருமான அல்ஹாஜ் மௌலவி எம்.எம்.கமறுதீனால் ஒப்பமிடப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# திருகோணமலையில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட ஐவர் கைது


(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த 5 பேரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (18) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியா, மஹதிவுல்வெவ, கலன்பிந்துனு வெவ பகுதிகளைச் சேர்ந்த 28, 30, 38, 40 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்டு வந்த டிப்பர் வாகனம் மற்றும் அனுமதிப்பத்திரமின்றி அதிக மரங்களை வெட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றமை என்ற குற்றச்சாட்டில் குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி ஜீ.வசந்த சந்திரலாலின் ஆலோசனையின் பேரில் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப் குமார, ஹேரத் ஆகியோருடன் வசந்த (28739), திசாநாயக்க (2646), ஜெயசிங்ஹ (59621), சஞ்சீவ (39036) ஆகியோர் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. குறித்த சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# திருகோணமலை கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

## அமைச்சர் டக்ளஸின் இணைப்புச் செயலாளர் ஸ்டாலின் உறுதி

திருகோணமலையில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் சுருக்கு வலை பயன்படுத்துவோரின் சட்டவிரோத செயற்பாடுகள், அலங்கார மீன்பிடிப்போர் தமது தொழிலை செய்ய முடியாமலிருப்பது, தொழில் உபகரணங்கள் இல்லாமை மற்றும் பாரம்பரியமான தமது கரைவலைப்பாடுகளை மீண்டும் அந்தந்த இடங்களில் செய்ய முடியாமை போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இவற்றுக்கான தீர்வுகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரைவில் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையை உங்களுக்கு உறுதிமொழியாகவே வழங்குகின்றேன் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்புச் செயலாளர் ஸ்டாலின் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள மீன்பிடித் திணைக்களத்தில் இடம்பெற்ற கடற்றொழிலாளர்களுக்கு ஐஸ் பெட்டிகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு ஐஸ் பெட்டிகளை வழங்கிவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், மாவட்டத்தின் பிரதேசங்களில் வாழும் கடற்றொழிலாளர்கள் தாம் பிடிக்கும் மீன்களை உடனடியாக சந்தைக்குக் கொண்டுவர முடியாமல் போவதால் அந்த மீன்கள் பழுதடைந்து விடுகின்ற நிலை ஏற்படுகின்றது.





அதுபோல் சிறிய படகு உரிமையாளர்கள் கடலில் மீன்களைப் பழுதுபடாமல் பாதுகாக்க இந்தப் பெட்டிகள் பயனுள்ளதாக அமையும். அதற்காகவே இவ்வாறு ஐஸ் பெட்டிகளை கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டத்தை எமது அமைச்சர் ஊக்கப்படுத்தினார்.

அத்திட்டத்தின் முதற்கட்டமாக இந்தப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. மேலும், 200 பெட்டிகளை திருமலைக்கு பெற்றுக்கொள்ள கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் சேனாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார். விரைவில் அதையும் பெற்றுக்கொடுக்க நாம் முயற்சி செய்வோம்.

தவிரவும் பலநாள் மீன்பிடிப்படகுகளை தொழிலாளர்களுக்கு வழங்கி அவர்களின் தொழிலை மேம்படுத்தவும், இந்த மாவட்டத்தில் யுத்தத்தின் போதான இடப்பெயர்வுக்கு முன்னர் கரைவலை தொழிலில் ஈடுபாடு காட்டியவர்களின் இழந்த தொழிலை மீண்டும் பெற்றுக்கொடுக்கவும், தேவையான வழிகாட்டல்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார் என்றும் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருமலை மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சேனாரத்ன, மாவட்ட மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் சிறீஸ்கந்தராஜா மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பில் தமிழரின் நில ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை உட்பட பல இடங்களில் உள்ள நிலங்கள் கலாசாரம், தொல்லியல் நிலையங்கள் என தமிழ் மக்களுடைய நிலங்கள் ஆக்கரமிக்கப்படுகின்றன. எனவே, ஆளும் கட்சியிலுள்ள இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாயை மூடிக்கொண்டிராது அரசாங்கம் செய்யும் செயற்பாடுகளை கட்டுப்படுத்தி மக்களை காப்பாற்ற முன்வர வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது காரியாலயத்தில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் தரை பகுதியான மயிலத்தமடு பகுதியில் அம்பாறை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் வெளியேறாமல் மீண்டும் பயிர் செய்துகொண்டு, எமது பண்ணையாளர்களின் கால்நடைகளை தாக்கி வருகின்றார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மனித உரிமை அமைப்புக்களும் இதற்காக பல்வேறுபட்ட எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் பிரதிபலிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரன் வழக்காளிகளாக சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் வழக்கு தாக்குதல் செய்திருந்தார்.

இதன்போது மகாவலி அதிகாரசபை அதிகாரிகள் இந்த மேய்ச்சல்தரைப் பகுதியில் அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களில் இருந்து தற்காலிகமாக பயிர்செய்கை செய்ய வந்துள்ளனர். இந்தப் பயிர்கள் அறுவடை முடிந்ததும் ஏப்ரல் மாதத்தில் அவர்கள் வெளியேறிவிடுவார்கள் என நீதிமன்றில் உத்தரவாதம் தெரிவித்தனர்.



அந்த அடிப்படையில் அறுவடை முடிந்துள்ளது. ஆனால், அவர்கள் முற்று முழுதாக அங்கிருந்து வெளியேறவில்லை. தற்போதுகூட வெளிமாவட்டங்களில் இருந்துவந்த குடியேறிகள் 40 பேர் வரை 100 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்துள்ளனர்.

அதேவேளை பண்ணையாளர்களின் கால்நடைகளைத் தாக்கிவருகின்றனர். 3 மாதங்களில் 10க்கு மேற்பட்ட கால்நடைகள் சுடப்பட்டுள்ளன. இது தொடர்பாக கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்றால் அவர்கள் அதனை உதாசீனம் செய்துவருவதுடன், அவர்களும் அதற்கு ஆதரவாக செயற்படுவதை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

எனவே, நாங்கள் பாரம்பரியமாக செய்து வந்த தொழில்களை எங்களால் செய்ய முடியாதளவு நெருக்கடிகள் வருகின்ற சூழலில், இந்த ஆளும் கட்சியில் பங்காளிகள், அபிவிருத்திக்குழுத் தலைவர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றவர்கள் அந்தப் பக்கமே போகின்றார்கள் இல்லை. அவர்களுடைய கஷ்டங்கள் மற்றும் நஷ்டங்கள் பற்றி சிந்திக்கின்றார்கள் இல்லை. ஆனால், இந்த பிரச்சினைகளுக்கு மாற்றுக் கருத்தை தெரிவித்து, பூசி மெழுகிவருவதுடன், குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போன்று ஒரு குறுகிய பகுதியில் வீதிபோடுவதும் கிறவல் போடுவதுமாக அவர்களது செயற்பாடு இருக்கின்றது.

ஆகவே, நீங்கள் வாயை மூடிக்கொண்டிருந்து துதிபாடுகின்றீர்கள். பங்காளிகட்சிகள் என்கிறீர்கள். 20 ஆவது திருத்தத்தில் துறைமுக ஆணைத் திட்டம், உட்பட அனைத்து திட்டங்கள் திருத்தசட்டங்களுக்கு கையை உயர்த்துகின்றீர்கள். இவ்வாறு இந்த மாகாண சபை மாற்றம் வந்தாலும் கூட சரணாகதியில் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டிருக்கப் போகின்றீர்களா? எனவே, இரு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கம் செய்யும் செயற்பாடுகளை கட்டுப்படுத்தி மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

# விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வு

(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்புக் கல்வி வலயத்திற்குட்பட்ட விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வு உதவிக்கல்விப் பணிப்பாளர் த.நடேசமூர்த்தி தலைமையில் கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று (18) நடைபெற்றது.





இதில் பட்டிருப்புக் கல்வி வலயத்தின் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சி.உதயசேகர், ஆசிரியர்களான அனுஷாந்தன், நித்தியகுமார், திருமதி நந்தினி நடேசமூர்த்தி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

தற்போது கொரோனா தொற்றுக் காரணமாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களை நவீன யுகத்திற்கு ஏற்ப வளப்படுத்தல் மற்றும் விஞ்ஞானக் கல்வியின் அடைவுமட்டத்தை அதிகரித்தல், இலகுவான கற்பித்தல் செயல்முறை ஆகியன தொடர்பாக ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் பட்டிருப்புக் கல்வி வலயத்தில் மாணவர்களின் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக உதவிக்கல்விப் பணிப்பாளர் த.நடேசமூர்த்தி தெரிவித்தார்.

# கல்முனையில் கொரோனா பரவல் தீவிரத்தால் பெருநாள் வியாபாரத்தை இரவிரவாகக் கண்காணித்த சுகாதாரத்துறை

**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நிர்வாகத்தின் கீழுள்ள சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாடின் வேண்டுகோளுக்கிணங்க, பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம்.பைசல் தலைமையில் வர்த்தக நிலையங்களுக்கு இரவு நேரக் களச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் வியாபாரமானது சுகாதார வழிமுறைகள் மற்றும் அரசாங்க கொவிட்-19 சுற்று நிருபங்களுக்கு அமைய நடைபெறுகின்றதா என்பதை அவதானிக்கும் வகையிலும், கொரோனா வைரஸை சாய்ந்தமருது பிரதேசத்தில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற ரீதியிலும், இந்த களப்பணி நடைபெற்று வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம்.பைசல் தெரிவித்தார். இதன்போது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயலணி பயிலுநலர்கள் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரதேசங்களில் கொரோனா தொற்று வேகமாகப் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# டயகம சிறுமி ஹிஷாலினி அகால மரணம் தொடர்பில் மனோ உதயா எம்.பி.க்கள் நடவடிக்கை!

## பொரளை பொலிஸ் சென்று நேரடியாக விபரம் கேட்டனர்




கடந்த 3ஆம் திகதி, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் இல்லத்தில் தீக்காயங்களுக்கு உள்ளாகி, பின்னர் மருத்துவமனையில் மரணமடைந்த டயகம பகுதியை சேர்ந்த ஹிஷாலினி என்ற சிறுமி தொடர்பில், தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி.யும், நுவரெலியா மாவட்ட த.மு.கூ. எம்.பி. உதயகுமாரும், நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பொரளை பொலிஸ் நிலையம் சென்று இதுவரை நடைபெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம கண்காணிப்பாளர் (சி.ஐ.) துமிந்த பாலசூரிய மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் பணியக பிரதம கண்காணிப்பாளர் (சி.ஐ.) இனோகா ஆகியோரை சந்தித்த எம்.பி.க்கள் இவ்விவகாரம் தொடர்பில் இதுவரை நடந்துள்ள விசாரணைகள் பற்றியும், மரணமானவரின் உடற்கூற்று சட்ட மருத்துவ அறிக்கை தொடர்பிலும் முழுமையாகக் கேட்டறிந்தனர்.

முன்னதாக மரணமடைந்த சிறுமி ஹிஷாலினியின் சொந்த ஊர் மற்றும் அவரது பெற்றோர் வசிக்கும் நுவரெலியா மாவட்ட டயகம பிரதேசத்தை கண்காணிக்கும் டயகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் கண்காணிப்பாளர் (ஐ.பி.) பாலிதவை தொலைபேசியில் அழைத்த மனோ கணேசன் எம்.பி., ஹிஷாலினி உட்பட, இத்தகைய வீட்டுப் பணியாளர்களை கொழும்பு மற்றும் நகர்ப்புற இல்லங்களுக்கு பணியாளர் தொழிலுக்காக கொண்டு சென்று சேர்த்த, இப்பகுதியை சேர்ந்த சங்கர் என்ற தரகரிடம் உடனடி வாக்குமூலம் பெற்று விசாரணைகள் மேற்கொள்ளும்படி அறிவுறுத்தினார். தற்போது சங்கர் என்ற இந்த தொழில் தரகர் இன்று திங்கட்கிழமை மேலதிக விசாரணைகளுக்காக, கொழும்பு பொரளை பொலிஸாரினால் கொழும்புக்கு கொண்டு வரப்படுகிறார்.

இந்நிலையில், ஹிஷாலினி என்ற இந்த சிறுமியின் அகால மரணம் தொடர்பில் பொதுவெளியில் நிலவும் கருத்துகள் சம்பந்தமாக கண்டி மாவட்ட த.மு.கூ. எம்.பி. வேலுகுமார், தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி.யுடன் கலந்தாலோசித்தார். இதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் குடும்பத்தவர் மற்றும் பதியுதீன் எம்.பி. தலைமையிலான, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக, அவர்கள் தரப்புகள் தொடர்பிலான முழுமையான விபரங்களை ஒரு எழுத்துமூல அறிக்கையாக உடன் வெளியிடும்படி, வேலு குமார் எம்.பி.சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

# கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைவதால் திருக்கோவில் ஆடி அமாவாசை உற்சவம் இடைநிறுத்தம்

## ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் அறிவிப்பு




**(வீரமுனை நிருபர்)**

கடந்த காலங்களில் இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறும் ஆலய உற்சவம் தங்குதடையின்றி நடைபெற்றது. ஆனால், இந்த வருடம் கொரோனா தொற்றுப் பரவலால் திருக்கோவில் ஆடி அமாவாசை உற்சவம் இடம்பெறாது என்பதை பக்தர்களுக்கு அறியத்தருகிறோம் என திருக்கோவில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

திருக்கோவில் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நேற்று (18) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருக்கோவில் ஆலயத்தின் பூஜைகள் கல்முனை, நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான 18 ஊர்களை உள்ளடக்கிய திருவிழாவாகும். திருக்கோவில் பிரதேசத்தில் நாளுக்கு நாள் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில், சுகாதாரப் பிரிவினர் மக்களை பாதுகாக்கும் நோக்கில், ஆலய குரு, நிர்வாகம் உட்பட 30 பேருடன் இறுக்கமான கட்டுப்பாடுகளுடன், ஆலய உற்சவத்தை நடத்த முடியுமென்று கூறியிருந்தார்கள். அவ்வாறு 30 பேருடன் திருக்கோவில் திருப்படைக்கோவில் ஆலய உற்சவத்தை, ஆலய நிர்வாகத்தினால் நடத்த முடியாது என்பதை யாவருமறிவர்.

எனினும், திருக்கோவில் சுகாதார வைத்திய அலுவலகத்திற்குட்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்படாத நிலையில், உற்சவத்தை நடத்துவதால் தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், 30 பேரை வைத்துக்கொண்டு உற்சவத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதாலும், பிதிர்க்கடன் தீர்க்கும் திருக்கோவில் ஆலய திருவிழாவினை இந்த வருடம் நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றார்.

# மட்டக்களப்பில் 40.4 மில்லியன் ரூபா செலவில் வீதி - வடிகான்கள் அமைக்கும் வேலைத்திட்டம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆரம்பித்து வைப்பு



**(செங்கலடி நிருபர்)**

முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் மிகக்கடுமையாக சண்டைபிடிப்பார்கள். ஆனால், தேர்தல் முடிந்ததும் தமது சமூகத்திற்காக ஒற்றுமையாக செயற்படுவார்கள். இதனை சில தமிழ் அரசியல்வாதிகள் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - செங்கலடி, ரமேஷ்புரம் கிராமத்தில் நேற்று முன்தினம் (17) 40.4 மில்லியன் ரூபா செலவில் வீதி மற்றும் வடிகான் அமைப்பதற்கான திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''சுபீட்சத்தின் கீழ் நாட்டைக் கட்டியெழுப்புவோம்'' எனும் ஜனாதிபதியின் தொனிப்பொருளுக்கமைய ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியின் ''சுபீட்சத்தின் கீழ் நாட்டைக் கட்டியெழுப்புவோம்'' எனும் தொனிப் பொருளின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றன. எதிர்க்கட்சியினரால் பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டாலும், விமர்சனங்களையும் விஷமத்தனங்களையும் கடந்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற விடயத்தில் அரசாங்கம் முனைப்பாகச் செயற்படுகின்றது. ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின் சுற்றுலாத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

அதன் பின் தற்போது உலக நாடுகளையே கொரோனா வைரஸ் தாக்கும் இந்த சூழலில் பொருளாதார ரீதியாகவும் மக்களின் வாழ்க்கை முறைமையை கட்டியமைக்க வேண்டும் என்பது அரசின் பொறுப்பாக இருந்து வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் பல வாக்குறுதிகளை அவர் வழங்கினார். நாமும் நாடாளுமன்றத் தேர்தல் காலப்பகுதியில் பல வாக்குறுதிகளை வழங்கினோம்.

அவற்றை நிறைவேற்ற மிகவும் சிரமத்துடன் செயற்படுகின்றோம். பேசுவது இலகுவான விடயம். அதற்கு செயற்பாட்டு வடிவம் கொடுப்பது கடினமான விடயமாகும். பல விமர்சனங்கள் மற்றும் பிரச்சினைகளைக் கடந்து மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அடுத்த அடுத்த கட்டங்களில் கிராமிய வீதிகள் மற்றும் கிராமிய பாலங்கள் ஆகியவற்றைச் செப்பனிட வேண்டியுள்ளது. ஒரு வருட காலத்தினுள் அரசாங்கம் பல வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது. குடிநீர் வசதியற்றோருக்கு குடிநீர்த்திட்டத்திற்கான வேலைகள் நடைபெறுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு வருட காலப் பகுதியில் 15 தேசிய பாடசாலைகளை பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

புன்னக்குடாவில் 265 ஏக்கர் பரப்பில் தொழிற்சாலைக்கான கட்டுமானப்பணிகள் நடைபெறுகின்றன. அந்தக் காணியைக்கூட பாதுகாக்க நாம் போராடினோம். தனியார் பலர் அந்த காணியைப் பிடித்தார்கள். காணி ஆணையாளர் விமல்ராஜை சுட்டார்கள். அந்த காணியை பாதுகாத்ததால் அங்கு தொழிற்சாலை அமைக்கப்படுகின்றது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் மிகக் கடுமையாக சண்டை பிடிப்பார்கள். ஆனால், தேர்தல் முடிந்ததும் தமது சமூகத்திற்காக ஒற்றுமையாக செயற்படுவர். இதை ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.


**தன நிதானய**
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 37 52 69 72
திகதி: 18.07.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0539

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 65 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 141 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3480 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2384 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 59172 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 11040 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3.531.280.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 76,286

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 99,409,147.60

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk



**கொவிசெத**
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம்: 2804 சீட்டிழுப்பு திகதி: 18.07.2021
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 28 48 50 63

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து மற்றும் 4 இலக்கங்கள் பொருந்துமாயின் | 79,049,052.00 | 0 |
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 7 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 139 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 279 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6905 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4558 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 114586 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 21057 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 147,531

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 4,842,680.00

ரூ. 79,340,097.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk



சீட்டிழுப்பு இலக்கம்: 4509 உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

**மஹஜன சம்பத**
திகதி:18.07.2021

வெற்றி எழுத்து: T வெற்றி இலக்கங்கள்: 6 8 9 2 8 4

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T 6 8 9 2 8 4 | ரூபா 10,598,217/- | 1 |
| 1ஆம் பரிசு | ■ 6 8 9 2 8 4 | ரூபா 2,000,000/- | 0 |
| 2ஆம் பரிசு | ■ ■ 8 9 2 8 4 | ரூபா 100,000/- | 8 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 9 2 8 4 | ரூபா 10,000/- | 82 |
| 4ஆம் பரிசு | ■ ■ ■ ■ 2 8 4 | ரூபா 1,000/- | 793 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 8 4 | ரூபா 100/- | 8125 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 4 | ரூபா 20/- | 80476 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 6 8 9 2 8 ■ | ரூபா 10,000/- | 7 |
| 8ஆம் பரிசு | ■ 6 8 9 2 ■ ■ | ரூபா 1,000/- | 77 |
| 9ஆம் பரிசு | ■ 6 8 9 ■ ■ ■ | ரூபா 100/- | 823 |
| 10ஆம் பரிசு | ■ 6 8 ■ ■ ■ ■ | ரூபா 50/- | 8064 |
| 11ஆம் பரிசு | T ■ ■ ■ ■ ■ ■ | ரூபா 20/- | 32189 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ.16,709,517.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
www.nlb.lk



Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 0857
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 18.07.2021
NLB NATIONAL LOTTERIES

ஆங்கில எழுத்து: S சுப்பர் இலக்கம்: 03 வெற்றி இலக்கங்கள்: 36 39 66 79

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 64 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 137 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 3681 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2438 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 60913 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 11115 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.137,203,064.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ.3,238,680.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112 470662, 0114 607000 இணையம்: www.nlb.lk
ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

# உலகில் விஷத்தன்மை கொண்ட உணவுகளை உண்ணும் நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடம்







(நூருல் ஹுதா உமர்)

ஆரோக்கியமான உற்பத்தித்திறன் மிக்க பிரஜைகளை உருவாக்குவதற்கு நச்சுத் தன்மையற்ற உணவை பெற்றுக்கொள்வதற்கான மக்களின் தார்மீக உரிமை மற்றும் "சுபீட்சத்தின் நோக்கு" எனும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில், அக்கரைப்பற்று மாநகர சபையினால் ஏற்கனவே முன்னெடுக்கப்படும் சேதனப் பசளை உற்பத்தியினை எதிர்வரும் காலங்களில் அதிகரிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

உலகில் இரசாயனக் கலப்புடனான விஷத்தன்மை கொண்ட உணவு வகைகளை உட்கொள்ளும் நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடம் வகிப்பதாக உள்நாட்டு, வெளிநாட்டு ஆராய்ச்சி நிபுணர்கள் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், ஜனாதிபதியின் காலப்பெறுமானம் மிக்க இயற்கை உரப்பாவனையை விவசாயிகள் மத்தியில் விஸ்தரிக்கும், உயிர்ப்புள்ள கொள்கைத் திட்டத்தை கடந்த பத்து வருடங்களாக அக்கரைப்பற்று மாநகர சபை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசேட கலந்துரையாடலில் அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.ராசீக், அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ.காதர், பிரதேச செயலக பிரதி திட்டமிடல் அதிகாரி, மாநகர சபை வைத்தியர், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று ஆலிம் நகரில் அமைந்துள்ள அக்கரைப்பற்று மாநகர சபை செயற்படுத்தும் சேதனப் பசளை உற்பத்தியகத்தை மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஐஸ் – கேரள கஞ்சாவுடன் செம்மண்ணோடையில் நால்வர் கைது



(எஸ்.எம்.எம். முர்ஷித்)

கறுவாக்கேணி வீதி செம்மணோடையில் ஐஸ் மற்றும் கேரளா கஞ்சாவுடன் நான்கு பேர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே மேற்படி நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் 30,550 மில்லி கிராம், கேரளா கஞ்சா 500 மில்லிகிராம் என்பன கைப்பற்றப்பட்டதுடன், இவ்வருடத்தில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் கைப்பற்றப்பட்ட அதிகூடிய ஐஸ் போதைப்பொருள் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர்கள் நால்வரில் இருவர் 45 வயதுடையோரெனவும், ஏனையோர் 40 மற்றும் 44 வயதுடையோரெனவும் தெரிவித்த பொலிஸார், இவர்கள் ஓட்டமாவடி, செம்மண்ணோடை, பிறைந்துறைச்சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், பிரபல போதைவஸ்து வியாபாரிகள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்துக்கு 22 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்திற்கு 22 இலட்சம் ரூபா பெறுமதியான மின்னியல் கற்பித்தல் மற்றும் கணினி சாதனங்கள் முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா நிறுவனத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டன.

வலயக் கல்வி அலுவலகம், முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா நிறுவனத்துடன் இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.டி.ஏ.நிஷாம் பிரதம அதிதியாகப் பங்கேற்று இந்நிகழ்வினைச் சிறப்பித்ததுடன், நன்கொடையானது சம்பிரதாயபூர்வமாக முஸ்லிம் எய்ட் நிறுவனத்திடம் பொறுப்பேற்று வலயக் கல்வி அலுவலகப் பணிப்பாளர் எஸ். சிறிதரனிடம் கையளிக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்வில் முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா கல்விக்கான நிகழ்சித்திட்ட முகாமையாளர் செல்வி நாதியா சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.

அத்துடன், திருகோணமலை மாவட்ட முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா ஊழியர்களும், வலயக் கல்வி அலுவலக சிரேஷ்ட பணியாளர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# பிறைந்துறைச்சேனையில் ஹெரோயினுடன் இருவர் கைது

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனைப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவரை நேற்று முன்தினம் (17) இரவு கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் குறித்த பகுதியில் நேற்று முன்தினமிரவு பொலிஸார் சுற்றிவளைத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது, 1600 மில்லிகிராம் போதைப்பொருளுடன் 21 வயதுடைய ஒருவர் மற்றும் 1300 மில்லிகிராம் போதைப்பொருளுடன் 26 வயதுடைய ஒருவர் உட்பட இருவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று முன்தினமிரவு சட்ட விரோதமாக உழவு இயந்திரத்தில் ஆற்றுமணல் ஏற்றிச்சென்ற ஒருவரை கைதுசெய்ததுடன், உழவு இயந்திரத்தை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. மேய்ச்சல் தரைக்காணியில் இராணுவமுகாம் அமைக்கும் திட்டம் ஆளும் தரப்பு எம்.பி.க்களின் அனுமதியுடன் இடம்பெறுகின்றதா?

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைரெட்ணம் கேள்வி

(கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாகவுள்ள 10 ஆயிரம் ஏக்கர் காணியை, இராணுவ முகாமாக மாற்றுவதற்குரிய செயற்றிட்டங்கள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பாக ஆளும் தரப்பாக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் இருவருக்கும் தெரியுமா அல்லது இருவருடைய அனுமதியுடன் மேற்கொள்ளப்படுகின்றதா என ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்றத் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்ற காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கால்நடை பண்ணையாளர்களுக்குரிய காணிகள் 4 தசாப்தங்களுக்கு மேலாக கால்நடை பண்ணையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் இக்காணியில் 10 ஆயிரம் ஏக்கர் காணியை இராணுவ முகாமாக மாற்றுவதற்குரிய செயற்றிட்டங்களை அரசு மேற்கொள்கின்றதா?

இத்திட்டத்தால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் கால்நடைகளுடன், 150க்கும் மேற்பட்ட கால்நடை பண்ணையாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இந்த திட்டம் நிறுத்தப்படவேண்டும் என்பதுடன், இக்காணிகள் காணி பயன்பாட்டுக்குழுவின் அனுமதியுடன் வழங்கப்பட்டனவா என்ற கேள்விக்கு அப்பால், இக்காணிகளை கால்நடை பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்கு ஆளுந்தரப்பைச் சேர்ந்த இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கொரோனா சம்பந்தப்பட்ட தடுப்பூசி ஏற்றுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மிகவிரைவாக மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும். இந்த தேர்தலைப் பொறுத்தவரையில் வடக்கு-கிழக்கிலுள்ள பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகள் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக இணக்கம் தெரிவித்த நிலையில், இந்த மாகாணசபை முறைமை என்பது முழு இலங்கைக்கும் சாதகமான நிலையை உருவாக்கும் காரணத்தால் மாகாணசபைத் தேர்தல் மற்றும் விகிதாசார தேர்தல் முறையை அமுல்படுத்துவதற்கும் இந்திய அரசாங்கம் தலையிட்டு இலங்கை அரசு ஊடாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேவேளை இலங்கையின் பொருளாதார தேவைக்காக சீன அரசாங்கத்துக்கு மட்டும் இலங்கையை தாரைவார்த்துக் கொடுப்பது என்பது



துரோகத்தனமான செயற்பாடு. எனவே, அரசாங்கம் அயல்நாடுகளுடனும், சர்வதேச மேலைத்தேய நாடுகளுடனும் சரியான இணக்கப்பாட்டுடன், இலங்கையின் தேசியத்துக்கு எந்தவிதமான குந்தகமும் வராமலும், வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியத்துக்கு எந்தவித குந்தகமும் வராமலும் வெளிநாட்டுக் கொள்கைகளை அமுல்படுத்தப்படவேண்டும் என்றார்.

# உடைந்து ஒரு வருடம் கடந்தும் இதுவரை செப்பனிடப்படாத சாய்ந்தமருது பாலம்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை வீதியில் தோணாவைக் கடந்து அடுத்த வீதிக்கு செல்வதற்கு அல் - அமீன் சமூக அபிவிருத்தி அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட பாலம் கடந்த ஆண்டு மே மாதம் (2020.05.20) கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவு அகற்றும் உழவு இயந்திரம் இப்பாலத்தின் ஊடாகச் சென்று குடைசாய்ந்ததால் பாலம் உடைந்தது.

மக்களின் போக்குவரத்துக்கு அவசியமான இப்பாலம் ஒரு வருடம் கடந்தும் இதுவரை திருத்தப்படாமல் உடைந்தபோது இருந்த அதே நிலையிலேயே இருப்பதாகவும், இதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# மாடுகளுடன் மோதிய கனரக வாகனம் மட்டு.வெல்லாவெளியில் விபத்து

## மாடொன்று பலி - 12 மாடுகள் படுகாயம்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள அம்பிளாந்துறை - வெல்லாவெளி வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் மாடுகளுடன் கனரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் மாடு ஒன்று உயிரிழந்துள்ளதுடன், 12 மாடுகள் படுகாயமடைந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியால் கனரக வாகனத்தில் கல் ஏற்றிக்கொண்டு வேகமாகப் பிரயாணித்தபோது வீதியில் குறுக்கே நின்ற மாடுகளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்தில் ஒரு மாடு உயிரிழந்ததுடன், 12 மாடுகள் படுகாயமடைந்தன.

இதனையடுத்து, குறித்த வாகனத்தை பொலிஸார் கைப்பற்றி, பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை - அக்போபுர பிரதேசத்தில் கருவாடு - தயிர் உற்பத்திக் கிராமம் திறந்துவைப்பு



(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அக்போபுர கிராமத்தில் சௌபாக்கிய மேம்பாட்டுப் பணியகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் என்பன இணைந்து சமுர்த்தி வதிவிட பொருளாதார நுண் நிதிய சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கருவாடு மற்றும் தயிர் உற்பத்திக் கிராமங்கள் நேற்று முன்தினம் (17) திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் உற்பத்திக் கிராமங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உற்பத்திக் கிராமங்கள் வேலைத்திட்டத்தின் கீழுள்ள அக்போபுர கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு விவசாயப் பொருட்களும், உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரள மற்றும் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்ஷா குமாரி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# விவசாயிகளுக்கு பசளையைப் பெற்றுத்தருமாறு கந்தளாயில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு







(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டம் கந்தளாயில் விவசாயிகளுக்கு பசளையைப் பெற்றுத்தருமாறு கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று விவசாயிகள் சங்கத்தினால் கந்தளாய் நகரில் நேற்று (18) முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கம் விவசாயிகளின் நிலங்களை விற்பனை செய்ய உத்தேசித்துள்ளதாகவும், பசளைக்கு தடைவிதித்துள்ளதாகவும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளதாகவும், பசளைகளைப் பெற்றுத்தருமாறும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

50க்கும் மேற்பட்டோர் சமூக இடைவெளியைப் பேணி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

கந்தளாய் விவசாயிகள் இதில் கலந்துகொண்டதோடு, சுலோகங்களையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்தனர்.

# மட்டு. கரடியனாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 11 பேர் கைது

## பதினொரு உழவு இயந்திரங்கள் மீட்பு

(ஏறாவூர் நிருபர் - நாஸர்)

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் கொள்ளையில் ஈடுபட்டிருந்த 11 வாகனங்களும், அவற்றின் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரி துஷார ஹேமச்சந்திர நேற்று (18) தெரிவித்தார்.

மாவடி ஓடைப் பிரதேச வாவியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 டிப்பர் வண்டிகளையும், அவற்றின் சாரதிகளையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, வடிச்சல் ஆற்றில் அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 6 உழவு இயந்திரங்களும், அவற்றின் சாரதிகளும் வவுணதீவு விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டு கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவர்களை இன்று மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



குற்றம் தவிர்

Police Roundup

## ஹெரோயினுடன் கைது

### மட்டக்குளி

மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்ட சமித்புர பிரசேத்தில், நேற்று முன்தினம் மாலை 6.10 மணியளவில் கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 25 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஹெரோயின் விற்பனையினூடாக உழைக்கப்பட்டதாகக் கூறப்படும் 8 இலட்சம் ரூபா பணத்துடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டு மோதரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பியகம

பியகம பொலிஸ் பிரிவுக்குப்பட்ட கனேவத்த பிரதேசத்தில், பியகம பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 06 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பியகம பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஸ்புர பிரதேசத்தில், கிராண்ட்பாஸ் பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 06 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டீ.20 தோட்டப்பகுதியில், பொரளை பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு 10.20 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 05 கிராம் 530 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### மட்டக்குளி

மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமித்புர பிரதேசத்தில், கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 05 கிராம் 510 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு மோதரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கல்கிஸை

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திடிய பாலத்துக்கு அருகில், கல்கிஸை குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் பிற்பகல் 2.10 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 04 கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### எகொட உயன

எகொட உயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்றொழில் அலுவலக தோட்டத்துக்கருகில், நேற்று முன்தினம் இரவு 7.50 மணியளவில் ஏகொட உயன பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 04 கிராம் 520 மில்லிகிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### தலங்கம-சிங்ஹபுர

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்ஹபுர பிரதேசத்தில், நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் தலங்கம பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 04 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஓகந்தர தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### தலங்கம-ஜயந்திபுர

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜயந்திபுர பிரதேசத்தில், நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் தலங்கம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 04 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

### தலங்கம- ரொபர்ட் குணவர்தன மாவத்தை

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொபர்ட் குணவர்தன மாவத்தை பிரதேசத்தில், நேற்று முன்தினம் பிற்பகல் 2.40 மணியளவில் தலங்கம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 04 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மேலுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### வத்தளை

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வத்தளை நகரப் பிரதேசத்தில், நேற்று முன்தினம் இரவு 8.50 மணியளவில் வத்தளை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 03 கிராம் 50 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நெரவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது – ஓபநாயக்க

ஓபநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடகும்புர பிரதேசத்தில், இரத்தினபுரி குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முற்பகல் 10.50 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு மற்றும் 02 துப்பாக்கித் தோட்டக்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு, ஓபநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஓபநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய சந்தேகநபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சிகரெட்டுகளுடன் சீன பிரஜையொருவர் கைது – மருதானை

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரேரா மாவத்தை பிரதேசத்தில், நேற்று முன்தினம் பிற்பகல் 1.35 மணியளவில் கொம்பனித்தெரு பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது தீர்வை வரியின்றி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 23 ஆயிரத்து 400 சிகரெட்களுடன் சீனப் பிரஜையொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வீதி விபத்துகள்

### களுத்துறை தெற்கு

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.35 மணியளவில் காலி - கொழும்பு பிரதான வீதியில் களுத்துறையிலிருந்து காலிக்கு பயணித்துக் கொண்டிருந்த லொறி வீதியினூடாக நடந்து சென்ற நபரொருவர் மற்றும் சிறுவன் ஒருவர் மீது மோதியதில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான நபர் மற்றும் குறித்த சிறுவன் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில், விபத்துக்குள்ளான குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

கரிபேரிய, பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயதுடைய வயோதிபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கொக்கரெல்ல

கொக்கரெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெல்சிறிபுர - கும்புகவெவ வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 12.45 மணியளவில் லேனவ பிரதேசத்திலிருந்து கும்புவெவயை நோக்கிப் பயணித்த வேன் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு மோதியதில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த நபர் ஆகியோர் கொகரெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சாரதி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்தவர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கும்புல்வானா பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பில் வேனின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடுவலை - கொள்ளுப்பிட்டி வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் மாலபே சந்தியில் கொஸ்வத்தையை நோக்கி சென்றுகொண்டிருந்த டிப்பர் ரக வாகனமொன்று கிளை வீதியில் வந்த முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான முச்சக்கரவண்டியின் சாரதி மற்றும் முச்சக்கரவண்டியின் பின்னால் பயணித்த பெண்ணொருவர் மற்றும் குழந்தைகள் இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சாரதி உயிரிழிந்துள்ளார்.

கொழும்பு-02ஐ சேர்ந்த 72 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ரத்கம

ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலி - கொழும்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு 8.20 மணியளவில் பிட்டிவெல்ல பிரதேசத்தில், கொழும்பை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் புரண்டமையினால் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி, பின்னால் பயணித்த பெண் மற்றும் சிறுவர்கள் இருவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது பெண்ணு,ம் சிறுவன் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். பியதிக, கிங்தொட பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஒருவரும், ஒன்றரை மாத குழந்தையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

**தொகுப்பு: நா.தினுஷா**

# ஆழ்கடலில் விபத்துக்குள்ளான மீனவர் கடற்படையினரால் மீட்பு



தென்கிழக்குத் திசையிலிருந்து இராவணா கலங்கரை விளக்கத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த 610 கடல் மைல் (1129 கிலோ மீற்றர்) ஆழ்கடல் பிரதேசத்தில் நேற்று (18) இடம்பெற்ற திடீர் விபத்தில் காயமடைந்த நிலையில், மீனவர் ஒருவர் கடற்படையினரால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு சிகிச்சைக்காக உடனடியாக ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆறு மீனவர்கள் கொண்ட மீன்பிடிப் படகொன்று காலி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 29 ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைகாக சென்ற நிலையில் அதிலிருந்த மீனவர் ஒருவர் விபத்துக்குள்ளாகி பலத்த காயத்துக்குள்ளாகியுள்ளதுடன், குறித்த மீனவர் சிகிச்சைக்காக அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

## இந்த மாதத்தில் மாத்திரம் 1811 பேர் அடையாளம்

தென்மேல் பருவப்பெயர்ச்சி மழையின் காரணமாக டெங்கு நோய் மீண்டும் அதிகரித்துள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 15 ஆயிரத்து 279 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த மாதத்தில் மாத்திரம் ஆயிரத்து 811 பேருக்கு டெங்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்திலேயே அதிகமானோருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதத்தில 1,440 பேர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்ட நிலையில், ஜூன் மாதத்தில் இரு மடங்காக அதிகரித்து 2,997 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில், இம்மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1,693 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. மேல் மாகாணத்திலேயே பெரும்பாலானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 7 ஆயிரத்து 435 பேர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனைத் தவிர கண்டி, குருநாகல், காலி, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் அதிகமாக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# நீர்மூழ்கிக் கப்பல் பாதுகாப்பு விரிதிறன் கட்டமைப்பு அறிமுகம்

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி.பி.பி. ஜயசுந்தரவின் தலைமையில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற பங்குதாரர் சந்திப்பொன்றில், நீர்மூழ்கிக் கப்பல் பாதுகாப்பு மற்றும் விரிதிறன் கட்டமைப்பை இலங்கை அறிமுகப்படுத்தியதாக வெளிநாட்டு அமைச்சு மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பன கூட்டாக அறிவித்துள்ளன.

ஆசியாவில் இதுபோன்ற ஒரு கட்டமைப்பைக் கொண்டுவந்த முதல் நாடாக இலங்கை அமைவதுடன், போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம் - உலகளாவிய கடல்சார் குற்றத் திட்டத்தின் மூலம் ஜப்பான் அரசாங்கத்தின் தாராள ஆதரவைப் பெறாவிட்டால் அது சாத்தியமானதாக அமைந்திருக்க முடியாது.

முடக்கநிலை, தொலைநிலை வேலை மற்றும் மெய்நிகர் மாநாடுகளின் மயமான இந்த புதிய யுகத்தில், உலகளாவிய டிஜிட்டல் தகவல் தொடர்புகளை நம்பியிருக்கின்றமை வியத்தகு வகையில் வளர்ந்துள்ளது. எனினும், அந்தத் தரவுகளை அனுப்புவதற்கு செயற்கைக்கோள்கள் தான் காரணம் என பெரும்பாலான மக்கள் இன்னும் தவறாகக் கருதுகின்றனர். உண்மையில், அனைத்து சர்வதேச டிஜிட்டல் தரவு மற்றும் தகவல் தொடர்புகளில் 99 சதவீதத்துக்கும் மேற்பட்டவை உலக சமுத்திரங்களில் 1.8 மில்லியன் கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தைக் கொண்டுள்ள 400க்கும் மேற்பட்ட கேபிள்களின் வலையமைப்பினூடாக பரிமாற்றப்படுகின்றன.

நாட்டில் கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் 2020 ஏப்ரல் மாதத்தில் முடக்கநிலை ஆரம்பமான காலப்பகுதிக்கு இடையில் இணையப் பாவனை நெரிசல் 25 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளதுடன், இது புதிய இயல்பு நிலைக்கு ஏற்ப மேலும் தொடரும் என சர்வதேச கேபிள் பாதுகாப்புக் குழு மதிப்பிடுகின்றது. எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த காலாண்டில் சூம் வீடியோ தொடர்பாடல் மூலமான வருமானம் முந்தைய ஆண்டை விடவும் 355 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கையின் நியாயாதிக்கத்தில் பல கேபிள்களைக் கொண்டிருப்பதன் அச்சுறுத்தல்கள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்து கொண்டதன் மூலம், இலங்கைக்கு பாதுகாப்பு மற்றும் விரிதிறனை வழங்குவதற்காக நீர்மூழ்கிக் கப்பல் கேபிள்கள் குறித்த தேசிய திட்டத்தை உருவாக்குவதற்காக, போதைப்பொருள் மற்றும் குற்றவியல் உலகளாவிய கடல்சார் குற்றத் திட்டம் மற்றும் குற்றத் தடுப்புக்கான சர்வதேச மையம் போன்ற சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து இலங்கை பணியாற்றி வருவதாக வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கட்டமைப்பின் தொடக்கத்தில், கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தின் தூதரகப் பொறுப்பாளரும், பிரதி தூதரகத் தலைவருமான கிடமுரா தோஷிஹிரோ, வணிக மற்றும் நிதி மையமாக அபிவிருத்தியடைவதற்கான இலங்கையின் அபிலாஷைகளை தேசிய் கட்டமைப்பானது நிச்சயமாக ஒருங்கிணைக்கும் அதேவேளை, ''நாட்டைக் கட்டியெழுப்பும் செழிப்பான பார்வை" இல் திட்டமிடப்பட்டுள்ள உலகளாவிய கண்டுபிடிப்பு மையமாகவும் இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

ஃபைபர்-ஒப்டிக் நீர்மூழ்கிக் கப்பலைப் பாதுகாப்பதற்காக நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைத் தீர்மானத்திற்கு இணங்க இலங்கையில் ஒரு வலுவான மற்றும் நெகிழக்கூடிய நீர்மூழ்கிக் கப்பல் கேபிள் சுற்றுச்சூழல் அமைப்பை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனநாயக்க மீண்டும் வலியுறுத்தினார். முற்போக்கான தேசிய நீர்மூழ்கிக் கப்பல் பாதுகாப்பு மற்றும் விரிதிறன் கட்டமைப்பொன்றை செயற்படுத்துவதற்காக இந்த முயற்சி இப்போது உதவும் அதேவேளை, இலங்கையின் டிஜிட்டல் மாற்றம் குறித்த பார்வையை மேலும் வலுப்படுத்துவதோடு, தொழில்நுட்ப சேவைகள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான மையமாக இலங்கையை நிலைநிறுத்தும் என அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்து சமுத்திரத்தில் ஒரு கடல் மற்றும் கப்பல் பரிமாற்ற மையமாக இலங்கையைக் காட்டும் வகையில், கட்டமைப்பில் மற்றும் செயற்பாட்டில் உள்ள சட்டங்கள் இலங்கையின் ஒட்டுமொத்த உருவத்திற்கு மேலும் பங்களிக்கும்.

# யானை தாக்குலுக்குள்ளாகி இருவர் பரிதாபமாக பலி

(அனுராதபுரம்)

காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி விவசாயிகள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவின் கொக்மடுவ பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், கஹட்டகஸ்திகிலிய, கொக்மடுவ பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

தமது வயல் நிலத்துக்குள் உட்புகுந்த காட்டு யானையைத் துரத்துவதற்கு முற்பட்டபோதே இரு விவசாயிகளும் யானையின் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இரு சடலங்களும் கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# நீர்கொழும்பு பிரதேச கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்க நடவடிக்கை

## - அமைச்சர் டக்ளஸ் உறுதி



நீர்கொழும்பு, முன்னக்கர மைதான விவகாரத்திற்கு விரைவில் நியாயமான தீர்வு காணப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்புக்கு நேற்று முன்தினம் (17) விஜயமொன்றை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், முன்னக்கர எனப்படும் கிள்ளடித் தோட்ட மைதானம் மற்றும் களப்பு அபிவிருத்தி திட்டத்தினை முன்னெடுப்பதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக நேரடியாக ஆராய்ந்தார். அதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் நீளமான களப்பாக காணப்படும் நீர்கொழும்பு களப்பினை நம்பி சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் சுமார் ஒரு பில்லியன் ரூபா செலவில் குறித்த களப்பினைப் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், முன்னக்கர என்று அழைக்கப்படும் கிள்ளடித் தோட்டப் பகுதியில் அமைந்திருக்கும் விளையாட்டு மைதானக் காணி, வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் உரிமை கோரப்பட்டு வருகின்ற நிலையில், பிரதேச மக்களுக்கும், வனப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குமிடையில் அசாதாரண சூழல் காணப்படுவதுடன், களப்பு அபிவிருத்திப் பணிகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், குறித்த விவகாரங்களை நேரடியாக ஆராய்வதற்காக நீர்கொழும்பிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதேச மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், குறித்த விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடனும் கலந்துரையாடி நியாயமான தீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துரிதமாக இடம்பெற்றுவரும் கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இலங்கையில் கொரோனா நோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நாடளாவிய ரீதியில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து அதன் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மக்களும் நோயின் தாக்கத்தைப் புரிந்து கொண்டு தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதற்கு ஆர்வத்துடன் தடுப்பூசி வழங்கப்படும் இடங்களுக்குச் சென்றனர்.

கொழும்பு மாநகரில் இந்த வேலைத்திட்டம் பல்வேறு பகுதிகளில் தற்போது தொடராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வகையில் நேற்றும் குணசிங்கபுரம் மிகுந்து மாவத்தையிலுள்ள இனோடேடா நிறுவன வளாகத்தில் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையின் வைத்தியர் லெப்டினன்ட் விக்ரமரத்ன தலைமையிலான வைத்திய மற்றும் தாதியர் குழுவினரும், கொழும்பு மாநகர சபை சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கெசல்வத்த பொலிஸாரும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களும் 30 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களும் வருகை தந்து தடுப்பூசியை ஏற்றிக் கொண்டனர்.

# இரு சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பம்

(ஜூட் சமந்த)

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 09 மற்றும் 13 வயது சிறுமிகள் இருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சந்தேகநபரொருவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

வீட்டுப்பணிக்காக துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ள சிறுமிகளின் வீட்டுக்கு சந்தேகநபர் வருகைதந்துள்ளார். இரண்டு மாத காலமாக அவ்வப்போது சந்தேகநபரினால் சிறுமிகள் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சந்தேகநபர் சிறுமிகளின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் இதுதொடர்பில் சிறுமிகள் தமது தாயாரிடம் அறிவித்துள்ளனர். அதனை தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுமிகள் இருவரையும் வைத்திய பரிசோதனைகளுக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள. இதுவரையில் சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை. இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஹொரணையில் கடைகளை உடைத்து திருட்டு

## மாணவர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை

(அஷ்ரப் ஏ.சமத்)

பிரபல்யமான பாடசாலையின் 16 வயதுடைய மாணவர்கள் மூவர் இரவு நேரங்களில் 8 கடைகளை உடைத்து 4 மில்லியன் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள், மடிக்கணினிகளை திருடிய சம்பவம் ஹொரணை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இதுதொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்ப விசாரணைகளில் அந்தபிரதேசத்திலுள்ள சி.சி.ரி.வி.கெமரா பதிவினூடாக இம் மாணவர்களது காட்சிகள் பதியப்பட்டுள்ளன.

அங்குருவோ தோட்ட பொலிஸார் குறித்த மாணவர்களை கைதுசெய்துள்ளனர். தொம்பகொட, பத்தேகொட ஆகிய பிரதேசங்களிலுள்ள எட்டு கடைகளே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளன. இவர்கள் மூவரும் கடந்த 15ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும்போது பொலிஸார் கைது செய்தனர். இவர்களிடம் ஒரு கைக்கோடாரியும் இருந்துள்ளது.

மேலும், இம் மாணவர்களால் ஹொரணை, புளத்சிங்கள, இங்கிரிய போன்ற பிரதேசங்களிலும் கடைகளை கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இவர்கள் மூவரும் கடந்த 15ஆம் திகதி 24 மணித்தியாலயத்திற்குள் 8 கடைகளை உடைத்து பொருட்களைத் திருடிய நிலையில், ஹொரணை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதன் பின்னர் இவர்களுக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.



வெள்ளவத்தை பிரதேசத்திலுள்ள முதியவர்களின் வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று (18) சுகாதார சேவையாளர்களினால் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

# மன்னாரில் சிற்றாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் துரித விசாரணை நடத்தப்பட வேண்டும்

## செல்வம் எம்.பி. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கோரிக்கை

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக ஆலயம் மற்றும் சிற்றாலய சொரூபங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க மக்களின் வணக்கத்திற்குரிய சொரூபங்கள், சிற்றாலயங்கள் இனந்தெரியாத நபர்களினால் இடிப்பது மற்றும் அடித்து சேதப்படுத்தும் சம்பவங்களை அவதானித்து வருகின்றேன்.




இத்தகைய செயல் கண்டிக்கத்தக்கது. மன்னாரில் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் வாழும் கத்தோலிக்க மக்களுக்கும், இந்து மக்களுக்கும் இடையே பகைமையை ஏற்படுத்தும் செயலாக நான் கருதுகின்றேன்.

குறித்த செயற்பாடு அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு எதிரான நபர்களின் செயல் என்பதை நான் நன்கறிகின்றேன்.

எனவே, காவல்துறையினர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அத்துடன், விரைவாக தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும், அத்தகைய நபர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் கொண்டுவந்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இனிமேல் இது போன்ற சம்பவங்கள் தொடர அனுமதிக்கக்கூடாது.

துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சிற்றாலயங்கள் மீதான தாக்குதலுக்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றுள்ளது.

# செட்டிக்குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் நீரில் மூழ்கி மரணம்



(வவுனியா நிருபர்)

வவுனியா செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியநொச்சிக்குளம் குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெரியநொச்சிக்குளம் குளத்தில் நேற்றுமுன்தினம் மதியம் 2.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,


வள்ளம் ஒன்றில் குறிதத நபர் மீன் பிடிக்கச் சென்றுள்ளார். இதன்போது குளத்தின் நடுப்பகுதியில் வள்ளம் நீருக்குள் மூழ்கியதனால் மரணமடைந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தில் பெரியநொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த பா.தியாகராசா என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

சடலம் அயலவர்களால் மீட்கப்பட்டு செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா கற்குவாரியில் கல் உடைப்பதற்கான முன்னாயத்த செயற்பாடுகள் ஆரம்பம்

## உடனடியாக நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை



(வவுனியா நிருபர்)

வவுனியா ஆசிகுளம் கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட கற்குளம் 2ஆம் பிரிவு பகுதியில் அமைந்துள்ள கற்குவாரியில் கல் உடைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையினையடுத்து குறித்த வேலைத்திட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கற்வாரியில் கல் உடைப்பதற்கான முன்னாயத்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதினையடுத்து அப்பகுதி மக்கள் அச்சத்துள்ளாகியுள்ளனர். இதற்கு முன்னர் குறித்த கற்குவாரி இயங்கிய சமயத்தில் இவற்றிற்கு அருகேயிருந்த வீடுகள் பல சேதமடைந்தன. அந்தக் கற்குவாரியில் தவறி வீழ்ந்து 9 வயது சிறுவன் உயிரிழந்ததுடன் இவற்றுக்கு அருகாமையில் முன்பள்ளி, ஆலயம் என்பனவும் அமைந்திருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கற்குவாரி இயங்குவதற்கு பல தடவைகள் முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் பொதுமக்களின் எதிர்ப்பினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், மீண்டும் கற்குவாரியை இயக்குவதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே உடனடியாக கற்குவாரி மீள செயற்பட முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தினை நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், கிராமசேவையாளர் ஆகியோருக்கு மகஜரும் கையளித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆசிகுளம் கிராம சேவையாளரை தொடர்புகொண்டு வினாவிய போது,

இந்த கற்குவாரி முன்னர் செயற்பட்ட காலத்தில் கற்குவாரிக்கு அருகேயுள்ள வீடுகள் சேதமடைந்திருந்துடன், வீதியில் மக்கள் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டதாக மக்கள் எனக்கு பல தடவைகள் முறைப்பாடு மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இந்த கற்குவாரி மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாக மக்கள் எனக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் பிரதேச செயலாளருக்கும் தகவல் வழங்கியுள்ளேன்.

அத்துடன், மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் எந்தவொரு செயற்றிட்டமும் எமது கிராமத்தில் முன்னெடுக்க அனுமதி வழங்க மாட்டேன் – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் பதவி விலகல்

## தமிழரசுக் கட்சித் தலைவருக்கு கடிதம் அனுப்பிவைப்பு!

யாழ்ப்பாணம் வடமாரட்சி - வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக செயற்பட்டுவரும் கோணலிங்கம் கருணானந்தராசா தனது பதவி விலகல் கடிதத்தை தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் முடிவுகளின் அடிப்படையில் வல்வெட்டித்துறை நகர சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி ஆட்சியமைத்தது.

17 உறுப்பினர்களைக்கொண்ட வல்வெட்டித்துறை நகர சபையில் 6 இடங்களில் வெற்றிபெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கோணலிங்கம் கருணானந்தராசா முன்னிறுத்தப்பட்டு, ஈபிடிபி உறுப்பினர்கள் இருவர் மற்றும் சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவரது ஆதரவுடன் 9 ஆதரவு வாக்குகள் மூலம் தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், எதிர்வரும் 31ஆம் திகதியுடன் பதவி விலகும் கடிதத்தை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா மற்றும் உள்ளுராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு கோணலிங்கம் கருணானந்தராசா கடந்த சில நாட்களுக்கு முன்னதாக அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டணி கட்சித்தரப்பினருக்கு சுழற்சி முறையில் நகர சபைத் தலைவர் பதவியை வழங்கும் உடன்பாட்டிற்கு அமைவாகவே இவ்வாறு கோணலிங்கம் கருணானந்தராசா தனது பதவியிலிருந்து விலகவுள்ளதாக மேலும் தெரியவருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்த கோணலிங்கம் கருணானந்தராசா இடைப்பட்ட காலத்தில், கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனிக் கட்சி தொடங்கியுள்ள எம்.கே.சிவாஜிலிங்கம் தரப்புடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் அன்னை இல்லத்தில் இடம்பெற்ற ஆடிப்பிறப்பு





(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் அன்னை இல்லத்தில் இடம்பெற்றது.

“ஆடிப்பிறப்பில் தமிழர் நாம் கூடிக்கொண்டாடிக் குதூகலிப்போம்”

எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவை இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, மாவட்ட அரசாங்க அதிபரினால் மாணவர்களுக்கு பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு 1993ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தர வகுப்பு தென்மராட்சி நண்பர்கள் 17 இலட்சம் ரூபா பெறுமதியிலான மருத்துவ உபகரணங்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.



உலகெங்கிலும் வாழும் 1990 க.பொ.த. சாதாரண மற்றும் 199 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு தென்மராட்சி நண்பர்கள் இணைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நிலையான அபிவிருத்தி மற்றும் கொவிட்-19 அவசரகால நிலைமை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மருத்துவ உபகரணங்களை வழங்கியிருந்தனர்.

நாடித்துடிப்பு, ஒட்சிசன் அளவு மற்றும் இரத்த அழுத்த கண்காணிப்புக் கருவிகள்-05, இதய இயக்க வரைபு பதிவுக் கருவிகள்-02, செயற்கை சுவாசம் வழங்கும் உபகரணங்கள்-03, இரத்த அழுத்த அளவீட்டுக் கருவிகள்-04 உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை வைத்தியசாலை அத்தியட்சகர் திருமதி டயாழினி மகேந்திரனிடம் கையளித்தனர்.

# நானாட்டான் பகுதியில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளினால் ஆபத்து

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் - நானாட்டன் பிரதேச சபை பிரிவிலுள்ள பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் வீதிகளில் மாடுகள் குடியிருப்பதாகவும் இதனால் பல விபத்துகள் ஏற்படுவதாகவும் நானாட்டான் பகுதி மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக, இரவுநேரங்களில் நானாட்டான் சுற்றுவட்ட பகுதி மற்றும் பிரதான வீதிகளின் கட்டாக்காலி மாடுகள் நடமாடுவதால் அதிகளவு விபத்து ஏற்படும் சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தபட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, விரைவில் வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கவனிப்பின்றி நடமாடும் மாடுகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நானாட்டன் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாவற்குழியில் பாலர் பாடசாலை திறந்துவைப்பு







(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-நாவற்குழி பிரதேசத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட “லக் தரு “ பாலர் பாடசாலை நேற்றுமுன் தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவினால் குறித்த முன்பள்ளி திறந்து’வைக்கப்பட்டது.

நாட்டிலுள்ள சிறார்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களின் நிதிப் பங்களிப்பில், இராணுவத்தினரின் உடல் உழைப்பினால் குறித்த முன்பள்ளி அமைக்கப்பட்டு திறந்துவைக்கப் பட்டுள்ளது.

முன்பள்ளி ஆரம்ப நிகழ்வில் 52ஆவது காலாட்படைத் தளபதி, 521, 522 மற்றும் 523 ஆகிய படை முகாம்களின் படைத் தளபதிகள், இராணுவ அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், பொதுமக்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# முல்லையில் வீடு புகுந்து வாள்வெட்டு குழுவினர் தாக்குதல்; குடும்பஸ்தர் காயம்!

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் கரும்புள்ளியான் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத நபர்கள் நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளடன் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனம் மற்றும் வீட்டுப் பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நள்ளிரவு நேரத்தில் இனந்தெரியாத நபர்கள் வீடொன்றுக்குள் புகுந்து நடத்திய தாக்குதலில் அதே இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா யாதவராசா (வயது - 43) என்பவர் படுகாயங்களுக்குள்ளானார்.

படுகாயமடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைக்களை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 19.09 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 19.07 கோடியை கடந்துள்ளதுடன், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 41.99 இலட்சத்தை தாண்டியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கொவிட்-19 வைரஸ் தற்போது உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களை ஆட்கொண்டு பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளபோதும் உலகம் முழுவதும் நாளுக்கு நாள் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு விகிதங்களின்படி அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் முன்னிலையிலுள்ளன.

இந்நிலையில், உலகம் முழுவதும் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) கொரோனாவால் 19,09,14,324 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 41,01,542 பேர் உயிரிழந்துள்ளனர்.



இந்தோனேஷியாவில் வைத்தியசாலைகளில் ஒட்சிசன் பற்றாக்குறைக்கு மத்தியில் சிகிச்சை பெற்றுவரும் கொரோனா நோயாளிகள்....

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 17,38,52,764 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 1,28,47,514 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 80,635 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, உலகளவில் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு விகிதங்களின்படி முன்னிலையிலுள்ள அமெரிக்காவில் இதுவரை 3,49,53,937 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6,24,715 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் இதுவரை 3,11,06,065 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,13,640 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு பிரேஸிலில் 1,93,42,448 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5,41,323 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், இந்தோனேஷியாவில் கொரோனா பரவல் வேகம் அதிகரித்து வருவதுடன், ஒட்சிசன் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அத்தோடு இந்தோனேஷியாவில் ஒரு நாள் பாதிப்பு 50 ஆயிரத்தை கடந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில் இந்தோனேஷியாவில் இதுவரை 28,32,755 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 72,489 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா பாதிப்பில் உலகளவில் இந்தோனேஷியா 15ஆவது இடத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜூலை இறுதியில் எடியூரப்பா பதவி விலகல்

## அடுத்த கர்நாடக முதல்வர் யார்?



கர்நாடக முதலமைச்சர் பதவியிலிருந்து எடியூரப்பா இந்த மாத இறுதியில் விலகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கர்நாடக முதலமைச்சரும் பா.ஜ.கவின் மூத்த தலைவருமான எடியூரப்பாவுக்கு எதிராக சொந்த கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்களே போர்க்கொடி தூக்கியமை கடந்த சில நாட்களாக பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

குறிப்பாக, எடியூரப்பாவின் மகன் விஜயேந்திரா கட்சியிலும் ஆட்சியிலும் தலையிட்டுவருவதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர். இதனைத் தொடர்ந்து, அவர் முதல்வர் பதவியிலிருந்து நீக்கப்படுவார் எனத் தகவல் வெளியானது.

இதனிடையே, எடியூரப்பா முதலமைச்சர் பதவியை இராஜிநாமா செய்யவுள்ளதாக தகவல் வெளியான நிலையில், அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்திருந்தார். பா.ஜ.க. தலைவர் ஜெ.பி. நட்டாவை சந்தித்த பின் செய்தியாளர்களை சந்தித்த எடியூரப்பா இராஜிநாமா குறித்து வெளியான செய்திகளில் உண்மையில் இல்லை எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த மாத இறுதியில் முதலமைச்சர் பதவியை அவர் இராஜிநாமா செய்வது உறுதியாகியுள்ளதாக தெரிகிறது. டில்லியிலிருந்து பெங்களூருக்கு சென்ற எடியூரப்பா செய்தியாளர்களிடம் பேசியபோது, "தற்போதைக்கு, முதலமைச்சர் பதவியில் தொடரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளேன்" எனக் குறிப்பிட்டார்.

ஆட்சியில் இரண்டு ஆண்டுகள்வரை தொடர மத்திய தலைமை அனுமதித்துள்ளதாகவும் அது ஜூலையுடன் முடியவுள்ளதால் உடல்நிலையை காரணங்காட்டி அவர் இராஜிநாமா செய்வார் என கட்சி வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

மூத்த தலைவர்களுடன் பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் தனது மகன்களுக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்து தர தலைமை உறுதியளித்ததைத் தொடர்ந்து இராஜிநாமா செய்ய அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும், ஆந்திரத்தின் ஆளுநராக அவரை நியமிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது. பரபரப்பான அரசியல் சூழலில், அடுத்த கர்நாடக முதல்வர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

# இலங்கை கடற்படையினரால் இராமேஸ்வரம் மீனவர்கள் விரட்டியடிப்பு



கச்சதீவு அருகே மீன்பிடித்த இராமேஸ்வரம் மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினர் வலைகளை அறுத்து விரட்டியடித்துள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை 300இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 1500இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு கச்சதீவு அருகே இந்திய - இலங்கை கடல் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, அங்கு 2 ரோந்து கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர், அப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாகவும், அங்கிருந்து செல்லவேண்டும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் அப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சுமார் 10இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளின் மீன்பிடி வலைகளை அறுத்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடித்து விரட்டினர். இதனால் மீனவர்கள் மீன்பிடிக்க முடியாமல் கரை திரும்பினர்.

இதுகுறித்து இராமேஸ்வரம் மீனவர்கள் கூறும்போது, ஒரு பக்கம் டீசல் விலை 100 ரூபா வரை உயர்வு, மற்றொருபுறம் பிடித்து வரப்படும் மீன்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை.

இந்நிலையில், மீன்பிடிக்கச் செல்லும் இராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினரால் பெரும் தொல்லை ஏற்பட்டு, ஒவ்வொரு விசைப்படகிற்கும் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுகிறது என்றனர்.

# அமெரிக்காவில் ஒருவருக்கு 'மங்கிபொக்ஸ்' வைரஸ் தொற்று



அமெரிக்காவில் 20 வருடங்களுக்குப் பின்னர் ஒருவருக்கு 'மங்கிபொக்ஸ்' குரங்கம்மை வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

டெக்சாஸ் மாகாணத்தில் வசித்துவரும் ஒருவர், நைஜீரியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வந்துள்ளார். இந்நிலையில், அவருக்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு பரிசோதனை செய்ததில் 'மங்கிபொக்ஸ்' வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது,

மங்கிபொக்ஸ் வைரஸ் பாதிப்பு ஏற்பட்ட நபர் டல்லாஸ் நகரில் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். அவர் லாகோஸ் நகரிலிருந்து நைஜீரியா, டல்லாஸ் என பயணம் செய்து வந்துள்ளார். எனவே, அவருடன் விமானப் பயணம் செய்த பயணிகளை தொடர்புகொள்ளும் பணியில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர் என தெரிவித்துள்ளது.

இந்த மங்கிபொக்ஸ் வைரஸானது தொடக்கத்தில் காய்ச்சல் பாதிப்பு ஏற்படுத்தும். அதன்பின் சிறிய கட்டிகள் போன்ற வீக்கம் ஏற்படுத்தும். முகம் மற்றும் உடல் முழுவதும் பரவும். 2 முதல் 4 வாரங்கள் வரை நீடிக்கும். பெரியம்மை உடன் தொடர்புடைய இந்த வைரஸ் பாதிப்பு அரிய நிகழ்வு என்றாலும் தீவிர நோய் தன்மை ஏற்படுத்தக்கூடியது என்று அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

# 5ஆம் ஆண்டு மெடிக்கல் எக்ஸன்ஸ் அவார்ட்ஸில் கொரானா முன்களப் பணியாளர்களுக்கு விருது






உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு இணைந்து நடத்திய ஐந்தாம் ஆண்டு மெடிக்கல் எக்சல்லேன்ஸ் அவார்ட்-2021 (5th ANNUAL MEDICAL EXCELLENCE AWARDS -2021) சனிக்கிழமை சென்னை லீ மெரிடியன் விடுதியில் நடைபெற்றது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆணைக்கிணங்க போர்க்கால அடிப்படையில் பணியாற்றி கொரோனா மூன்றாவது அலையை கட்டுக்குள் கொண்டுவந்த அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவு தொழிலாளர்கள், அம்பியூலன்ஸ் ஓட்டுநர்கள் மற்றும் காவல்துறையினர் உள்ளிட்ட கொரோனா ஒழிப்பு போர்க்கால வீரர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் தொடக்கத்தில் ஒருங்கிணைப்பாளரும், உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவருமான செல்வகுமார் வரவேற்புரையாற்றினார். தமிழக மக்கள் நலவாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் கலந்துகொண்டு அனைவருக்கும் விருது வழங்கி சிறப்புரையாற்றியபோது, தமிழ்நாடு அரசு கொரோனா ஒழிப்பிற்கு முன்னெடுத்து இருக்கும் திட்டங்களைப் பற்றியும், அனைவருக்கும் தடுப்பூசி போடுவதற்கான திட்டங்களைப் பற்றியும், மருத்துவர்கள் செய்துவரும் மகத்தான பணியைப் பற்றியும், இந்த நிகழ்வை ஒருங்கிணைத்து இருக்கிற உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் ஐந்தாண்டு சேவை பற்றியும் பேசியதோடு, கொரோனா முன்களப் பணியாளர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் வழங்கினார்.

மேலும் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டொக்டர் கலாநிதி வீராசாமி, மற்றும் டொக்டர் சி.எம்.கே.ரெட்டி உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இதில் தமிழ்நாட்டின் பிரபல அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# மும்பையில் கடும் மழை:

## மண்சரிவு - சுவர் இடிந்து 25 பேர் பலி



மும்பையில் பெய்துவரும் கடும் மழையை தொடர்ந்து செம்பூர் மற்றும் விக்ரோலியில் குடிசைகளும், கட்டடங்களும் இடிந்து வீழ்ந்த விபத்துகளில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

மும்பை செம்பூரில் குடிசை வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் இடிபாடுகளில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர். அந்தேரியில் மின்சாரம் பாய்ந்து ஒருவரும், பாந்தப் பகுதியில் சுவர் இடிந்து 16 வயது சிறுவனும் உயிரிழந்தனர். விக்ரோலியில் இரண்டு மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் 5 பேர் உயிரிழந்தனர்.

மேலும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கி உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடும் மழையால் மும்பையை பெரும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மும்பையின் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவுமுதல் தொடர் மழை பெய்து இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையும் முடங்கியது. தாழ்வான பகுதிகளில் வீடுகளுக்குள்ளேயும் மழைநீர் புகுந்ததால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.



கொரோனாவை மறந்து சென்னை மீன் சந்தைகளில் குவியும் கூட்டம். தனிமனித இடைவெளியை காற்றில் பறக்கவிட்ட அவலம்.

## பிரிட்டன் சுகாதார அமைச்சருக்கு 'டெல்ட்டா' வைரஸ் பாதிப்பு



பிரித்தானிய சுகாதார அமைச்சருக்கு டெல்ட்டா வகை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா தாக்கம் அதிகரித்து வருகிறது. பிரித்தானியாவில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் படிப்படியாகக் குறைந்துவருவதையடுத்து இன்னும் இரண்டு நாட்களில் ஊரடங்கை முழுவதுமாக நீக்க அந்நாட்டு பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அரசு முடிவெடுத்துள்ளது.

அதே சமயத்தில், ''பிரித்தானியாவில் 'டெல்ட்டா' வைரஸ் பரவலால் அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனுடன் 'டெல்ட்டா ப்ளஸ்' வைரஸும் பரவி வருவதால் ஊரடங்கு நீடிக்கப்படவேண்டும்'' என்ற கோரிக்கை வலுக்கிறது. இதற்கு சமீபத்திய உதாரணமாக ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது.


பிரித்தானிய சுகாதார அமைச்சர் ஜாவித் தனது டுவிட்டர் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் பேசிய அவர்,

தனக்கு 2 டோஸ் தடுப்புமருந்து செலுத்தப்பட்டதாகவும் அதன் பின்னரும் தான் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் மேட் ஹான்கொக் கொரோனா கட்டுப்பாடுகளை மீறியதற்காக பதவிநீக்கம் செய்யப்பட்டார். இதனையடுத்து ஜாவித் சில வாரங்களுக்கு முன்னரே புதிய செயலாளராக நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்ட சில வாரங்களிலேயே இவருக்கு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதால் தற்போது பிரித்தானிய சட்டப்படி இவர் 10 நாட்கள் தனிமையிலுள்ளார். பிசிஆர் பரிசோதனையில் இவருக்கு கொரோனா தாக்கம் இல்லை என்று நிரூபணமான பின்னரே இவர் நாடாளுமன்றத்திற்கு வரமுடியும்.

இவருக்கு இரண்டு டோஸ் 'அஸ்ட்ரா செனேகா' தடுப்புமருந்து செலுத்தப்பட்டும் கொரோனா தாக்கியுள்ளது. இது டெல்ட்டா வகை வைரஸாக இருக்கலாமென மருத்துவர்கள் கருதுகின்றனர்.

## முக ஒப்பனை..!



கனடாவில் ஒப்பனைக் கலைஞராக பணிபுரியும் இளம்பெண் ஒருவர் தன் முகத்தில் பல்வேறு தோற்றங்களைக் காணும் வகையில் ஒப்பனை செய்துகொண்ட வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

வான்கூவரைச் சேர்ந்த Mimi Choi என்ற இளம்பெண் இந்த ஒப்பனையை செய்துள்ளார். இதனை செய்துமுடிக்க 8 மணிநேரம் ஆனதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தப் பெண்ணின் இந்த வித்தியாசமான முக ஒப்பனை வீடியோ சமூக வலைத்தளங்களில் அதிகம் பேரால் பகிரப்பட்டு வருகிறது.

## ஒட்டகத்துக்கும் சிகை அலங்காரம்



பாகிஸ்தான் சிகை அலங்கார நிபுணரொருவர், ஒட்டகங்களுக்கு சிகை அலங்காரம் செய்து, அழகுபடுத்தி வருகிறார். அலி ஹசன் (Ali Hassan) (வயது 50) என்பவர் சிந்து மாகாணத்தின் Daulatpur என்ற நகரிலிருந்து ஆண்டுதோறும் கராச்சி ஒட்டக சந்தைக்கு வந்து இப்பணியில் ஈடுபட்டு வருகிறார்.

ஓர் ஒட்டகத்தை அலங்காரம் செய்ய சுமார் 5 மணிநேரம் பிடிக்கும் என தெரிவித்த Ali Hassan, கலை அம்சங்களுக்கேற்ப 5 ஆயிரம் ரூபாமுதல் 10 ஆயிரம் ரூபாவரை கட்டணம் வசூலிக்கிறார். இவரது கை வண்ணத்தால் பாகிஸ்தான் ஒட்டகங்கள் பொலிவான தோற்றத்திற்கு மாறி வருகின்றன.

# தலிபான் தாக்குதலில் 'ரொய்ட்டர்' புகைப்பட ஊடகவியலாளர் உயிரிழப்பு



### ஐ.நா. இரங்கல் – கண்டனம்

## ''அவர் இருந்தது தெரியாது''

## மரணத்துக்கு மன்னிப்பு கோருகிறது தலிபான் அமைப்பு








புகைப்பட ஊடகவியலாளர் டேனிஷ் சித்திக் மறைவுக்கு ஐ.நா. இரங்கல் தெரிவித்துள்ளதுடன், அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டரஸ், சித்திக்கின் மறைவுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சித்திக்கின் மறைவுக்கு தலிபான் அமைப்பினர் மன்னிப்பு கோரியுள்ளதுடன், சித்திக் மோதல் நடந்த இடத்தில் இருந்தமை தங்களுக்குத் தெரியாது என தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, சித்திக் மறைவுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கந்தகார் பிராந்தியத்தில் பாகிஸ்தான் எல்லையை யொட்டியுள்ள ஸ்பின் போல்டாக் பகுதியை தலிபான்களிடமிருந்து மீட்பதற்காக அரச படைகள் கடும் மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

இரு தரப்புக்கு இடையிலான இந்த மோதல் குறித்த செய்திகள் மற்றும் படங்களை சேகரிக்கும் பணியில், ரொய்ட்டர் செய்தி நிறுவனத்தில் பணியாற்றிவந்த இந்திய புகைப்பட பத்திரிகையாளரான டேனிஷ் சித்திக் ஈடுபட்டிருந்தார். அப்போது தலிபான்கள் நடத்திய தாக்குதலில் சிக்கி டேனிஷ் சித்திக்கும் ஆப்கன் அதிகாரியொருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

38 வயதான டேனிஷ் சித்திக் மும்பையைச் சேர்ந்தவர் என்பதுடன், இரண்டு குழந்தைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. ஊடகத்துறையில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்படும் புலிட்சர் விருதை கடந்த 2018ஆம் ஆண்டு அவர் பெற்றிருந்தார்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ''புகைப்பட பத்திரிகையாளர் சித்திக்கின் மரணம் ஆப்கானிஸ்தானில் ஊடகங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களை வெளிக்காட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பணியாற்றிவரும் ஊடகத்தினர் தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர். தலிபான்களின் தாக்குதலால் பலியான சித்திக் மறைவுக்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளது.

மேலும், ஐ.நா. சபை பொதுச் செயலாளர் அந்தனியோ குட்டேரஸ் டேனிஷ் மறைவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், டேனிஷ் சித்திக்கின் மரணத்திற்கு மன்னிப்பு கோரியுள்ள தலிபான் அமைப்பினர் சித்திக் மோதல் நடந்த இடத்தில் இருந்தது தங்களுக்குத் தெரியாது என தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஸபியுல்லா முஜாஹித்,

''மோதல் நடைபெற்ற பகுதியில் பத்திரிகையாளர் இருந்தது எங்களுக்குத் தெரியாது. இத்தகைய நிகழ்வுகளில் செய்தியாளர்கள் இருப்பதை எங்களுக்கு முறையாக தெரிவித்தால் மட்டுமே குறிப்பிட்ட இம்மாதிரியான சூழல்களில் அவர்களை பாதுகாக்க முடியும்" எனத் தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

### கொரோனா வைரஸை ஆய்வுசெய்த

## வைரஸ் நிபுணருக்கு சீன இராணுவ விஞ்ஞானிகளுடன் தொடர்பு



சீனாவின் உயர்மட்ட வைரஸ் நிபுணரான டொக்டர் ஷி ஷெங்லிக்கு, அந்நாட்டு இராணுவ விஞ்ஞானிகளுடன் தொடர்பு இருந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த காலத்தில் குறைந்தது இரண்டு சீன இராணுவ விஞ்ஞானிகள் இந்த வைரஸ் நிபுணருடன் கொரோனா வைரஸ் ஆராய்ச்சியில் ஒத்துழைத்ததாகவும் அவர்களில் ஒருவர் இறந்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. உலகத்தை உலுக்கிக்கொண்டிருக்கும் கொவிட் - 19 வைரஸின் தோற்றுவாயைக் கண்டறிவதற்கான பாதையில் இந்தத் தகவல்கள் முக்கியமானவையாக அமைந்திருக்கின்றன.

வௌவால் கொரோனா வைரஸ் தொடர்பாக ஆபத்தான பரிசோதனைகளை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட டொக்டர் ஷெங்லி வூஹான் வைரஸியல் நிறுவனம் இராணுவத்துடன் சேர்ந்து ஆய்வுகளை செய்ததாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை மார்ச்சில் திடடவட்டமாக மறுத்தார் என்று ஃபொக்ஸ் நியூஸை மேற்கோள் காட்டி என்.பி.சி.நியூஸ் செய்தி வெளியிட்டது.

ஆனால், ஷெங்லிக்கு இராணுவ விஞ்ஞானிகளுடன் தொடர்பு இருப்பதற்கான சான்றுகளை கண்டுபிடித்ததாக அந்த செய்திச்சேவை தெரிவித்தது. ஷெங்லி இராணுவ விஞ்ஞானியான ரொன் ஜிகாங்குடன் 2018ஆம் ஆண்டிலும் இன்னொரு இராணுவ விஞ்ஞானியான சூ யூசென்னுடன் 2019 டிசம்பரிலும் சேர்ந்து செயற்பட்டார். 2020ஆம் ஆண்டில் வெளியான கட்டுரையொன்றின் அடிக்குறிப்பில் சூ காலமாகிவிட்டதாகவும் மரணத்துக்கான காரணத்தை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் என்.பி.சி. செய்தியில் கூறப்பட்டிருந்தது.

வூஹான் ஆய்வுகூடத்திற்குள் இடம்பெற்ற செயற்பாடுகள் குறித்து உண்மைநிலை அறிக்கையொன்றை கடந்த ஜனவரியில் தயாரித்த முன்னாள் இராஜாங்க திணைக்கள ஆலோசகர் டேவிவ் அஷெர் கொரோனா வைரஸ் சம்பந்தப்பட்ட 'இரகசிய செயற்றிட்டம்' ஒன்றுக்கு சீன இராணுவம் நிதியளித்தது என்று தான் நம்புவதாக என்.பி.சி. நியூஸுக்கு கூறினார்.

வூஹான் ஆய்வுகூடத்திற்குள் இருந்த பல வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களிடமிருந்து தனக்கு தகவல்கள் கிடைத்ததாக கூறி அஷெர் தனது கருத்தை நியாயப்படுத்தினார். சிவிலியன் நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகூடம் கூறியதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆய்வுகூடத்தில் இருந்தே கொரோனா வைரஸ் வெளிப்பட்டது என்ற கோட்பாடு அபத்தமானது என்று சீனா இதுவரை நிராகரித்திருக்கிறது.

''அமெரிக்காவிலுள்ள சிலர் வூஹான் ஆய்வுகூடத்திலிருந்து வைரஸ் வெளிப்பட்டதாக கூறி திரிபுபடுத்தப்பட்ட கதைகளை கட்டிவிடுகிறார்கள். சீனா இது குறித்து பெரும் விசனமடைந்திருக்கிறது'' என்று சீன அதிகாரியொருவர் இந்த மாதம் ஃபொக்ஸ் நியூஸுக்கு தெரிவித்தார்.

உண்மைச்சான்றுகளையும் விஞ்ஞானத்தையும் மதித்குமாறும் கொவிட் -19 வைரஸின் தோற்றுவாயைக் கண்டறியும் செயற்பாடுகளை அரசியல்மயமாக்காமல் பெருந்தொற்றுக்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பில் கவனம் செலுத்துமாறும் சீனா அமெரிக்காவைக் கேட்டிருக்கிறது.

வூஹானிலிருந்து வெளிக்கிளம்பியதாக நம்பப்படுகின்ற கொவிட்-19 வைரஸ் இப்போது உலகம் பூராவும் பரவியிருக்கிறது.



**ஜேர்மனி மற்றும் பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் கடும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 170 ஆக உயர்ந்துள்ளது.**

**ஜேர்மனியின் ஸ்டெயின்பர்க் என்ற அணையில் விரிசல் விழுந்துள்ளதால் அந்த அணை எந்த நிமிடத்திலும் உடையும் அபாயம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் அதனருகே இருந்த 4,500 பேர் உடனடியாக வேறிடம் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.**

**பெல்ஜியத்தில் லீஜ் மற்றும் வெர்வியர்ஸின் சில பகுதிகளை சுனாமிபோல் வந்த வெள்ளம் நீரில் மூழ்கடித்தது.**

**இரு நாடுகளிலும் வெள்ளத்தினால் மாயமான நூற்றுக்கணக்கானவர்களை தேடும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.**

# 'கொவிஷீல்ட்' ஏற்றிக்கொண்ட சர்வதேச பயணிகளை தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்க பிரான்ஸ் அரசு முடிவு

'கொவிஷீல்ட்' தடுப்பூசிகளை செலுத்திக்கொண்ட சர்வதேச பயணிகளை தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்க பிரான்ஸ் அரசு முடிவுசெய்துள்ளது.

பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா செனகா நிறுவனம் உருவாக்கியுள்ள கொரோனா தடுப்பூசியை இந்தியாவின் சீரம் நிறுவனம் 'கொவிஷீல்ட்' என்ற பெயரில் தயாரித்து வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இந்தத் தடுப்பூசி, பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சூழலில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் அனுமதிக்கப்படுவோர் செலுத்தியிருக்கவேண்டிய கொரோனா தடுப்பூசிகளின் பட்டியலில் 'அஸ்ட்ரா செனகா' தடுப்பூசியின் பெயர் இடம்பெற்றிருந்தது. ஆனால், 'கொவிஷீல்ட்' தடுப்பூசியின் பெயர் அதில் இடம்பெறாததால், இந்தியாவில் கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள், ஐரோப்பிய




நாடுகளுக்குச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து இந்திய அரசு சார்பில் இந்த விவகாரம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்களையும் அனுமதிக்க பல்வேறு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சம்மதித்த நிலையில், தற்போது பிரான்ஸ் அரசும் கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களை அனுமத்திக்க முடிவுசெய்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டுப் பிரதமர் ஜீன் கேஸ்டக்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''அஸ்ட்ரா செனகா'வால் உருவாக்கப்பட்டு, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்கள் வெளிநாடுகளிலிருந்து பிரான்ஸ் வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அதேநேரம், டெல்ட்டா வகை கொரோனா பரவலைத் தடுப்பதற்காக எல்லைகளில் சோதனைகள் கடுமையாக்கப்படும்" - என்றுள்ளது.

# Sports Diary

Last week

## திங்கள்

### தொடரை கைப்பற்றிய பங்களாதேஷ்

சிம்பாப்வே அணியுடனான ஒரு போட்டிகொண்ட டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் அணி 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணிக்காக இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாடிய மஹ்முதுல்லாஹ் ரியாத் தெரிவானார்.

### சம்பியனான இந்திய வம்சாவளி வீரர்



விம்பிள்டன் டென்னிஸ் சிறுவர் பிரிவின் ஒற்றையர் பட்டத்தை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 17 வயதுடைய சமிர் பானர்ஜீ கைப்பற்றினார். ஒரு மணித்தியாலம், 22 நிமிடங்கள் நீடித்த இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் சமிர் பானர்ஜீ 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் சக நாட்டவரான விக்டர் லிலோவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

## செவ்வாய்

### உலகக்கிண்ணம் வென்ற சர்மா மரணம்

1983ஆம் ஆண்டு கபில் தேவ் தலைமையில் இந்திய அணி ஐ.சி.சி. உலகக்கிண்ண சம்பியன் பட்டம் வென்ற வேளையில் இந்திய அணியில் இடம்பெற்றிருந்த பஞ்சாப்பைச் சேர்ந்த யஷ்பால் சர்மா, டில்லியில் வசித்துவந்த நிலையில் தனது 66 வயதில் திடீர் மாரடைப்பால் உயிரிழந்தார். மத்திய வரிசை துடுப்பாட்ட வீரரான யஷ்பால் சர்மா 1978 முதல் 1985 வரை இந்திய அணிக்காக விளையாடியுள்ளார். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு பயிற்சியாளர், வர்ணனையாளர், தெரிவுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளில் அவர் இருந்துள்ளார்.

### ஒலிம்பிக் பணியாளர்கள் நால்வர் கைது

டோக்கியோ ஒலிம்பிக் போட்டி பணிகளுக்காக ஜப்பானுக்கு சென்ற அமெரிக்கா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த நான்கு மின் திருத்துனர்கள் கொக்கெய்ன் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்காக கைதுசெய்யப்பட்டனர். இரண்டு பிரிட்டன் மற்றும் இரண்டு அமெரிக்கர்கள் ஜூலை 3 முதல் 5 ஆகிய தினங்களில் கைதுசெய்யப்பட்டதாக ஜப்பான் பொலிஸார் தெரிவித்தனர். டோக்கியோ விளையாட்டுகளுக்கான இடங்களில் பயன்படுத்தப்படும் மின்சார ஜெனரேட்டர்களுக்கான பராமரிப்புப் பணிகளில் பங்கேற்க கடந்த பெப்ரவரி மற்றும் மே மாதங்களுக்கு இடையில் இந்த நான்கு பேரும் ஜப்பானுக்கு சென்றுள்ளனர்.

### 49 பேர் கைது



யூரோ கிண்ண உதைபந்து இறுதிப் போட்டியில் இங்கிலாந்து தோல்வி அடைந்ததால் இடம்பெற்ற வன்முறையில் ஈடுபட்ட 49 பேர் லண்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். லண்டனிலுள்ள பல முக்கிய சாலைகளில் திரண்ட ரசிகர்கள், தெரு விளக்குகள், பஸ்கள் மீது போத்தல்களை வீசி கலவரம் செய்தனர். இந்த வன்முறையை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையின் 19 பேருக்கு காயம் ஏற்பட்டிருந்தது.

## புதன்

### விம்பிள்டனில் சூதாட்டம்

விம்பிள்டன் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் ஜேர்மனி வீரர் விளையாடிய முதல் சுற்று ஆட்டத்திலும், ஆண்கள் இரட்டையர் முதல் சுற்று ஆட்டம் ஒன்றிலும் முடிவு சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் உள்ளது. இதனால் இந்த இரண்டு ஆட்டங்களிலும் சூதாட்டம் நடந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. சர்வதேச டென்னிஸ் ஒருமைப்பாட்டு அமைப்பு இதுகுறித்து விசாரணை நடத்திவருகிறது.

### மீண்டும் திரும்பிய இங்கிலாந்து வீரர்கள்

இலங்கை அணியுடனான இருதரப்பு கிரிக்கெட் தொடர் நிறைவுபெற்ற வேளையில் ஒருசில இங்கிலாந்து அணி வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதால், அதில் விளையாடிய அனைத்து வீரர்களும் பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் தொடரில் விளையாடாத நிலையில், அடுத்து நடைபெறவுள்ள பாகிஸ்தான் அணியுடனான ரி-20 தொடருக்கு திரும்பினர்.

### தகுதிபெற்ற இலங்கை அணி



கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மத்திய ஆசிய வலயத்துக்கான தகுதிகாண் போட்டியில் இலங்கை அணி உஸ்பெகிஸ்தான் அணியை 25-23, 25-13, 25-22 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி ஜப்பானில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 21ஆவது ஆசிய கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரில் விளையாடுவதற்கு தகுதிபெற்றது.

## வியாழன்

### பண்ட்டுக்கு கொரோனா

இங்கிலாந்திலுள்ள இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியானது. அதில் ஒருவர் இந்திய அணியின் இளம் விக்கெட் காப்பாளரான ரிஷப் பண்ட் என்பது உறுதி செய்யப்பட்டது. கொரோனா தொற்றுக்குள்ளான இருவரும் 10 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.



# முரளியின் குற்றச்சாட்டுக்கு கடிதம் எழுதிய திமுத் – மெத்யூஸ்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் அண்மையில் தனியார் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றின்போது இலங்கை அணி வீரர்களின் ஒப்பந்த விவகாரம் தொடர்பில் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார். இந்நிலையில், முரளிதரனின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து இலங்கை கிரிக்கெட் அணியின் அனுபவ வீரர்களான அஞ்சலோ மெத்யூஸ் மற்றும் திமுத் கருணாரத்ன ஆகியோர் முரளிதரனுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, "ஒப்பந்தங்களில் உள்ள பிரச்சினை முற்றிலும் பணம் என்று நீங்கள் கூறுவது நியாயமற்றது மற்றும் பொய்யானது. இத்தகைய குற்றச்சாட்டுகளை நாங்கள் தாழ்மையுடன் நிராகரிக்கிறோம், மறுக்கிறோம். ஒவ்வொரு வீரருக்கும் "வெளிப்படைத்தன்மை ஏன் கொடுக்கப்பட வேண்டும்?'' என்று நீங்கள் வினா தொடுக்கிறீர்கள், இதைப் பற்றி நீங்கள் உண்மையில் அறிந்திருக்கவில்லை என்று தெரிகிறது. "எந்தவொரு ஒப்பந்தத்திலும் நுழைவதற்கு முன்பு அனைவருக்கும் நியாயமான கேள்விகளைக் கேட்பது உரிமை என்று அனைத்து வீரர்களின் கருத்தும் இருந்தது. இது வீரர்கள் மற்றும் இலங்கை கிரிக்கெட்டின் சிறந்த நலனுக்கான விடயம். எனவே, இந்த விடயத்தில் வெளிப்படைத்தன்மை மிக முக்கியமானது மற்றும் நியாயமானது.''

"ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதில் இழுத்தடித்து நாங்கள் (மெத்யூஸ், திமுத்) மற்றும் வேறு சில மூத்த வீரர்கள் இளம் வீரர்களை தவறாக வழிநடத்தி ஏமாற்றிவிட்டோம் என்று ஒரு நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் குறிப்பிடுவது சரியானதா என்று நாங்கள் உங்களிடம் கேட்கிறோம்.'' "உங்களைச் சந்தித்து எதையும் தெளிவுபடுத்த நாங்கள் விரும்புகிறோம். எங்களுக்கிடையில் இதுபோன்ற எந்தவொரு சர்ச்சையும் இல்லை என்று நாங்கள் இன்னும் நம்புகிறோம். நீங்கள் எங்கள் தாய்நாட்டின் ஒரு சின்னம், உங்கள் சாதனைகள் ஒருபோதும் மறக்கப்படாது.



# நூற்றாண்டைக் கடந்த ஒலிம்பிக் சம்பியனான ஜிம்னாஸ்டிக் ராணி





*(ரமணி)*

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் பல பெற்றவர்களில் நூறு வயதைத் தாண்டி இன்றும் வாழ்ந்துகொண்டிருப்பவர் ஏக்னஸ் கெலடி. ஹங்கேரியைச் சேர்ந்த கெலடி கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார். டோக்கியோ ஒலிம்பிக்கில் சாதிக்கக் காத்திருக்கும் வீரர்களுக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.





ஹங்கேரியில், புடாபஸ்ரியில் 1921ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி பிறந்த ஏக்னஸ் கெலடியின் நூற்றாண்டின்போது டோக்கியோ ஒலிம்பிக் நடப்பது சிறப்பம்சமாகும். சோகம், பின்னடைவு, துன்புறுத்தல், படுகொலை முயற்சி, மரண வதை முகாம் போன்ற பல தடைகளைத் தாண்டியே கெலடியால் சாதிக்க முடிந்தது.

ஜிம்னாஸ்டிக்கில் சிறந்து விளங்கிய ஏக்னஸ் கெலடி, 16ஆவது வயதில் ஹங்கேரியில் நடந்த தேசிய போட்டியில் முதலாவது தங்கத்தை வென்றார். ஒலிம்பிக்கில் 5 தங்கம், உலக சம்பியன் போட்டிகளில் 1954ஆம் ஆண்டு தலா ஒரு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்றார். 16 வயதில் ஆரம்பமான பதக்க வேட்டை 35 வயது வரை தொடர்ந்தது.




கெலடியின் யுத பின்னணி காரணமாக 1940ஆம் ஆண்டு விளையாட்டிலிருந்து கெலடி தடை செய்யப்பட்டார். இரண்டாவது உலக மகா யுத்தம் கெலடியின் வாழ்க்கையில் விளையாடியது. 1944ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஹிட்லரின் படைகள் ஹங்கேரியைக் கைப்பற்றியன. தவறான ஆவணங்களைப் பெற்று ஒரு வேலைக்காரி பெண் பிரோஸ்கா ஜூஹாஸின் அடையாளத்தை எடுத்துக்கொண்டு மரண முகாமுக்கு நாடு கடத்தப்பட்டார். "நான் உயிருடன் இருந்தேன். பைரோஸ்காவிடம் நான் உடைகள் மற்றும் காகிதங்களை மட்டுமல்லாமல், அவள் பேசிய விதத்தையும் மாற்றிக்கொண்டேன்'' என்று கெலடி கூறினார்.

நாஜிப் ஆஷ்விட்ஸ் - பிர்கெனோ வதை முகாமில் கெலடியின் தகப்ப'னும் உறவினர்களும் கொல்லப்பட்டனர். தோல்வியுற்ற சோவியத் எதிர்ப்பு எழுச்சிக்கு ஒரு வருடம் கழித்து 1957ஆம் ஆண்டில் கெலடி அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்தார். 1959ஆம் ஆண்டில் ஒரு ஹங்கேரிய விளையாட்டு ஆசிரியரான ரொபர்ட் பீரோவை மணந்தார். அவருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. அவர் போட்டியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு, உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்தார், மேலும் இஸ்ரேலிய தேசிய ஜிம்னாஸ்டிக்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக கடமையாற்றினார்.

கெலடியின் நூற்றாண்டு பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட "ஜிம்னாஸ்டிக்ஸ் ராணி, ஆக்னஸ் கெலெட்டியின் 100 ஆண்டுகள்'' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. 1921ஆம் ஆண்டில் பிறந்த அவர், மொத்தத்தில் 10 ஜிம்னாஸ்டிக் பதக்கங்களை வென்றார்.





### ஆரம்ப விழாவில் ஜில் பைடன்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அமெரிக்காவின் முதற்பெண்மணி என அழைக்கப்படும் அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவி ஜில் பைடன் ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் கலந்துகொள்வார் என தெரிவிக்கப்பட்டது.

## வெள்ளி

### குழு 'ஏ'யில் இடம்பெற்ற இலங்கை

7ஆவது ஐ.சி.சி. ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், தொடரில் பங்கேற்கும் அணிகளின் குழு வகைப்படுத்தல் வெளியிடப்பட்டது. இதில் முதல் சுற்றில் விளையாடவுள்ள இலங்கை அணி குழு 'ஏ'யில் இடம்பிடித்தது. குழு 'ஏ'யில் இலங்கையுடன் ஏனைய அணிகளாக அயர்லாந்து, நெதர்லாந்து, நமீபியா அணிகள் காணப்படுகின்றன.

### 5 ஆண்டுகளின் பின்னர் இந்தியா - பாகிஸ்தான் மோதல்

ஐ.சி.சி. ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் 'சுப்பர் 12' சுற்றில் குழு 2 இல் இடம்பெற்றுள்ள இந்தியா – பாகிஸ்தான் அணிகள் கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்குப் பின்னர் 5 ஆண்டுகள் கழிந்து மீண்டும் ரி-20 போட்டியில் மோதுகின்றன.

### மீண்டும் ஆரம்பம்

கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி ஆரம்பமாகி, மே மாதம் 2ஆம் திகதிவரை நடத்தப்பட்ட நிலையில் ஒத்திவைக்கப்பட்ட சுப்பர் லீக் உதைபந்து தொடரின் எஞ்சிய போட்டிகளை சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்றி ஒகஸ்ட் இறுதியில் நடத்த இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## சனி

### தொடரை கைப்பற்றிய மேற்கிந்திய தீவுகள்

சுற்றுலா அவுஸ்திரேலிய அணியுடன் நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட ரி-20 சர்வதேச தொடரை மேற்கிந்திய தீவுகள் அணி 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. நான்காவது ரி-20 போட்டியில் மாத்திரம் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றிருந்தது.

### ஒலிம்பிக் கிராமத்தில் கொரோனா

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்ற நிலையில், ஒலிம்பிக் கிராமத்தில் ஜூடோ வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல் ஒன்றின் ஊழியர்கள் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

### டோக்கியோவில் மாயமான உகண்டா வீரர்



20 வயதான உகண்டா நாட்டு பளுதூக்கும் வீரர் ஜூலியஸ் செகிடோலெக்கோ, டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்துகொள்வதற்காக ஜப்பான் சென்ற நிலையில், மேற்கு ஜப்பானின் ஒசாகாவிலுள்ள இசுமிசானோ என்ற நகரத்தில் தங்கி பயிற்சியில் ஈடுபட்டிருந்த நிலையில் மாயமாகினார். கொரோனா பரிசோதனைக்காக வீரர்கள் அழைக்கப்பட்டபோது அவர் மாயமானது தெரியவந்தது.

## ஞாயிறு

### பிறந்தநாளில் அறிமுகம் பெற்ற கிஷான்



இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில், ஒருநாள் அறிமுகத்தை பெற்றுக்கொண்ட 23 வயதுடைய இஷன் கிஷான், தன்னுடைய பிறந்தநாளில் ஒருநாள் அறிமுகத்தைப் பெற்று, பிறந்தநாளில் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகம் பெற்ற இரண்டாவது இந்திய வீரராக வரலாற்றில் பதிவானார். முதல் வீரராக குருஷரன் சிங் கடந்த 1990ஆம் ஆண்டு அறிமுகம் பெற்றார்.

### ஒரே ஓவரில் 6 சிக்ஸர்கள்

அயர்லாந்தில் நடைபெற்ற உள்ளூர் ரி-20 கிரிக்கெட் போட்டியில் கிரேகொக் - பாலிமேனா அணிகள் மோதின. இறுதி ஓவரில் பாலிமேனா அணியின் வெற்றிக்கு 35 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் பாலிமேனா அணியின் தலைவர் ஜோன் கிளாஸ் கடைசி ஓவரின் ஆறு பந்துகளையும் சிக்சருக்கு தூக்கி அணியை வெற்றி பெறவைத்தார். இதன்மூலம் ஒரே ஓவரில் 6 சிக்சர்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் இணைந்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7